இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

அக்டோபர் 2013 October | இதழ் 273 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION



அரங்கேற்றம்



ஸ்காபரோ 'சப்வே'க்கு 660 மில்லியன்



குடிவரவு அமைச்சருடன்...





ரொறன்ரோ மத்தி இடைத்தேர்தல்

23 வது ஆண்டில் 23rd Year

Growing with the Community ESTD 1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து — **From the Editor**

# செயலிலும் காட்டுக!

2009 யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றி பல்வேறு அறிக்கைகள் வந்தவாறுள்ளன.

மனிதாபிமான அடிப்படையில் இவர்களுக்கு உதவ வேண்டிய அவசியம் பற்றி பெருமளவில் உலகளாவிய ரீதியில் பேசப்படுகின்றது.

ஐ. நாவின் மனித உரிமை ஆணையத்தில் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்று இலங்கை அரசு தொடர்ந்து கூறி வருகின்றது.

கடந்த செப்டம்பரில் இலங்கை சென்று நிலைமைகளை நேரில் கண்டறிந்த மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை, கடந்த மாதம் 25ஆம் திகதி அறிக்கையொன்றை ஜெனிவா ஆணையகத்தில் சமர்ப்பித்தார்.

நம்பகமான விசாரணை, நல்லிணக்க முயற்சி, பொறுப்புக்கூறலுக்கு உத்தரவாதம் ஆகிய விடயங்களை இலங்கை அரசு தட்டிக் கழித்து வருமானால், சர்வதேச விசாரணை அவசியமாகுமென இவரது அறிக்கை தெரிவிக்கின்றது.

அடுத்த மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைப் பேரவையின் கூட்டத்திலேயே இது பற்றி இறுதி அறிவிப்பு வரும். அதற்கு அடுத்த மாதம் நவநீதம் பிள்ளையின் பதவிக் காலம் முடிந்துவிடும் என்பதால், காலத்தை இழுத்தடிக்க இலங்கை அரசு முயற்சிக்கிறது.

இது, மனித உரிமை பற்றியும் மனிதாபிமானம் பற்றியும் பேசுபவர்களுக்குத் தெரியாததல்ல.

கொல்லப்பட்டவர்கள் காணாமற்போனவர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் என்ற பெருங்கணக்கைவிட, இன்னொரு தொகையினர் அக்கம்பக்க நாடுகளில் அகதிகளாக அவல வாழ்க்கை நடத்துகின்றனர்.

கனடாவுக்குக் கப்பலில் ஈழத்தமிழர் அகதிகளாக வந்ததோடு, சட்டப்படி இந்நாட்டின் சகல கதவுகளும் மூடப்பட்டன. ஆஸ்திரேலியாவுக்குப் படகுகளில் செல்பவர்கள் கடலில் மூழ்குவதும், எஞ்சிமிஞ்சுவோர் அடைத்து வைக்கப்படுவதும் செய்தியாகி விட்டது.

தென்னாசியக் கரையோர நாடுகளில் பல்லாயிரம் ஈழத்தமிழர் அவல வாழ்க்கை வாழ்கின்றனர். சொந்த மண்ணுக்குத் திரும்ப முடியாமலும் கரையேறிய நாடுகளில் வாழ முடியாமலும் இவர்கள் அவஸ்தைப் - படுகின்றனர்.

இவர்களில் சுமார் மூவாயிரம் பேர் ஐக்கிய நாடுகள் அகதிகள் அமைப்பினால் (UNHCR) அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டும், வேறு நாடுகளுக்குச் செல்ல முடியாது அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஜெனிவா ஒப்பந்தத்தில் அகதிகளை ஏற்பதாக ஒப்புக்கொண்ட கனடா போன்ற நாடுகள்கூட இவர்கள் விடயத்தில் பாராமுகமாகவிருப்பது வேதனைதருவது.

மனிதாபிமானம் பற்றிப் பேசினால் மட்டும் போதாது, அதனைச் செயலிலும் இந்த நாடுகள் காட்ட வேண்டும்!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## 23வது ஆண்டு மலர் பணிகள் துரிதம்!

இருபத்து மூன்று ஆண்டுகளாகக் கனடாவில் மாதம் தவறாது வெளிவந்து கொண்டிருக்கும் 'தமிழர் தகவல்' சஞ்சிகை, எதிர்வரும் ஜனவரி மாதம் அகவை இருபத்து மூன்றினைப் பூர்த்தி செய்கின்றது.

வழக்கம் போல ஆண்டு மலர் வெளியீடு, 2014 பெப்ரவரி மாத நடுப்பகுதியில் ரொறன்ரோவில் நடைபெறும். 23வது ஆண்டு பூர்த்தி மலர் தயாரிப்புப் பணி துரிதமடைந்துள்ளது என்பதை எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் அறியத்தருவதில் மகிழ்வடைகின்றோம்.

கனடியத் தகவல்களையும், புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வியல் தகவல்களையும் ஆவணப்படுத்தும் தகவல் திரட்டாக சுமார் 160 பக்கங்களில் ஆண்டு மலர்கள் வெளிவருவதை அனைவரும் அறிவர்.

எனவே, இதற்கான கட்டுரைகள் தமிழ் அல்லது ஆங்கில மொழியில், 'தகவல்' என்பதை அடிப்படையாக வைத்து எழுதப்பட வேண்டியது அவசியம்.

மூத்தோர்கள், இளையோர்கள், மாணவர்கள் ஆகியோரும் எழுதலாம். இவர்களின் அனுபவங்கள்கூட பரிமாற்றத்துக்குரிய தகவல்களே.

அச்சாகும் ஆறாயிரம் பிரதிகளில் சுமார் ஆயிரம் வரையானவை இலங்கை மற்றும் தமிழீழம் உட்பட தமிழர் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் முப்பது வரையான நாடுகளுக்கு அனுப்பப்படுவது வழக்கம்.

தாயக பல்கலைக் கழக ஆசிரியர்கள் - மாணவர்கள் மத்தியில் 'தமிழர் தகவல்' பெரிதும் விரும்பப்படும் ஓர் ஆய்வுக்குரிய வெளியீடாக மதிக்கப்படுகின்றது.

23வது ஆண்டு மலருக்கான ஆக்கங்கள் 2013 நவம்பர் 30ஆம் திகதி வரை ஏற்கப்படும். அச்சடிக்கப்பட்டவைகளை tamilsinfo@sympatico.ca என்ற முகவரிக்கு மின்னஞ்சலில் அனுப்பலாம். கையெழுத்துப் பிரதிகளை தபாலில்:

Tamils Information,
P.O.Box - 3, Station - F,
Toronto, Ontario, M4Y 2L4
என்ற முகவரிக்கு அனுப்பவும்.

**முதன்மை ஆசிரியர்**
**416.920.9250**

## 'பிரசவ சுற்றுலா' பிரஜாவுரிமை புதுவகை மோசடியைத் தடுக்க திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது!

பிறக்கப்போகும் பிள்ளைகளுக்குக் கனடிய பிரஜாவுரிமை பெறுவதற்காகக் கனடாவுக்கு வருகைதரும் வெளிநாட்டவர்களின் பயணத் திட்டமொன்றைக் கனடிய எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். 'பிரசவச் சுற்றுலா' (Birth Tourism) என்று இந்தத் திட்டத்துக்குப் பெயரிட்டிருக்கும் கனடிய அதிகாரிகள் இதனை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளைச் செயற்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

குறிப்பிட்ட நாடொன்றைச் சேர்ந்த பெண்கள், கர்ப்பிணிகளாக இருக்கும்போது கனடாவுக்குச் சுற்றுலா வரும் தொகை திடீரென அதிகரித்துக் காணப்பட்டது. இவர்கள், கனடாவில் பிள்ளைகளைப் பிரசவித்த பின்னர், பிள்ளைகளுடனேயே நாடு திரும்புகின்றனர். ஆனால் அந்தப் பிள்ளை, பிறப்பினால் கனடியப் பிரஜாவுரிமையைப் பெறுகின்றது.

Birth Tourism : Movement of Pregnant women - "They wanted to deliver on Canadian soil so their children would be Canadian citizens. When they became adults their Canadian children could also sponsor the parents to immigrate.

இவ்வாறு கனடிய மண்ணில் பிறக்கும் அந்தக் குழந்தைகள், கனடிய பிறப்புச் சாட்சிப் பத்திரத்தை (Canadian Birth Certificate) வைத்திருப்பதால் எந்த வேளையிலும் கனடாவுக்கு வந்து போகவும், வேண்டுமானால் கனடாவில் குடியேறவும் தகுதி பெறுகின்றனர்.

குறிப்பிட்ட பிள்ளை 18 வயதானபின் கனடாவில் வசிக்குமானால் தமது பெற்றோரையும், தாம் திருமணம் செய்யும் வெளிநாட்டுத் துணைவரையும் 'ஸ்பொன்சர்' செய்வதற்கான சட்டபூர்வ உரிமையையும் பெறுகின்றது.

கர்ப்பிணிகளாக வரும் தாய்மார்களில் பலரும் பிரசவத்துக்கு வைத்தியசாலைகளுக்குச் செல்லாமல் பிரசவம் செய்வதற்காகப் பல இடங்களில் ரகசியமாக இயங்கும் 'பிரசவ வீடுகளைப்' (Birth houses) பயன்படுத்தி வருவது கியுபெக், பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய இடங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனைத் திட்டமிட்ட ஓர் மோசடியாகக் கருதும் கனடிய குடிவரவுத் திணைக்களம், இதனைத் தடுப்பதற்கான புதிய பொறிமுறை ஒன்றைக் கண்டுபிடித்து அதனை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது.

## கனடிய விசா பெறுவதற்கு புகைப்படத்துடன் விரல் ரேகையும், மேலதிக 85 டாலர் கட்டணமும்!

கனடாவுக்கு வருகைதர விசா பெறும் விண்ணப்பதாரிகள் 'உயிரியல்' இயல்புச் சோதனைக்கு உட்பட வேண்டிய நடைமுறை இந்த மாதம் அமுலுக்கு வருகின்றது. இதற்காக விண்ணப்பத்துடன் தங்கள் புகைப்படத்தையும் விரல் அடையாளத்தையும் மேலதிகமாக 85 டாலர்களையும் செலுத்த வேண்டும். ஆனால் குழந்தைகளும் முதியோர்களும் ராஜதந்திரிகளும் இதில் விதிவிலக்கானவர்கள்.

இந்த மாதம் 23ஆம் திகதியிலிருந்து சவுதி அரேபியா, சூடான், தென் சூடான், சோமாலியா உட்பட பதினொரு நாடுகள் இந்தத் திட்டத்துக்குள் கொண்டுவரப்படுவதாகக் கனடிய குடிவரவு அமைச்சு அறிவித்துள்ளது.



எதிர்வரும் டிசம்பர் மாதம் 11ஆம் திகதியிலிருந்து சிறீலங்காவும் இந்த உயிரியல் (Biometrics) சோதனை முறைக்குள் கொண்டுவரப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

றொறன்ரோ நகரில் புகைத்தல் தடையை மேலும் பல இடங்களுக்கு விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சாப்பாட்டு இடங்கள், நூலகங்கள், வைத்தியசாலைகள் ஆகியவற்றின் உட்பிரவேசிக்கும்/வெளியேறும் வாயிற் பகுதிகள், ஏரிக்கரைகள், நேதன் பிலிப் ஸ்குயர் மற்றும் டண்டாஸ் ஸ்குயர் போன்ற நகரின் எட்டுப் பொதுமக்கள் கூடும் ஸ்குயர்கள் (இடங்கள்) என்பவற்றில் தடை கொண்டுவரப்படவுள்ளது.

கனடிய முன்னாள் பிரதமர்களில் ஒருவரான பிறைன் மல்றோனியின் சொந்த இல்லம் விற்னைக்கு வந்துள்ளது. மொன்றியலிலுள்ள மாளிகை போன்ற இந்த இல்லத்தின் விலை 7.9 மில்லியன் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கற்களால் கட்டப்பட்ட இந்த இல்லம் (stone house) ஏழு படுக்கை அறைகளைக் கொண்டது. உள்ளக உடற்பயிற்சிக்களம் (ஜிம்), அழகான நீச்சல் தடாகம், பிரத்தியேக படிப்பு அறை என்பவை இந்த இல்லத்தின் சிறப்பம்சங்கள்.

உணவு வங்கியைப் பயன்படுத்துவோர் தொகை றொறன்ரோ பெருநகரில் அண்மைக் காலத்தில் மிகவேகமாக அதிகரித்து வருகின்றது. ஒற்றைப் பெற்றொரும், வேலையிழப்போரும் அதிகமாகி வருவதுடன், பொதுநலப்படி குறைவாக வழங்குவதுமே முக்கிய காரணங்களாகும். 416 றொறன்ரோ நகரில் 40 வீதத்தினாலும், 905 எனப்படும் றொறன்ரோ பெருநகரப் பகுதியில் 20 வீதத்தினாலும் இத்தொகை அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் மக்கள் மகிழ்ச்சியாக வாழும் நாடுகளில் ஆறாவது இடத்தை கனடா பிடித்துள்ளது. குடும்பங்களின் வருமானம், ஊழலின்மை, நன்கொடைகள் அளிக்கும் வகை போன்ற பல சாதக பாதக விடயங்களை மையப்படுத்தி ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்தப் பட்டியலை வருடாந்தம் வெளியிடுகின்றது. உலகின் மிக மகிழ்ச்சியான இடமாக டென்மார்க்கும், அடுத்தடுத்த இடங்களில் நோர்வே, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, சுவீடன் நாடுகளும் வந்துள்ளன.

'சூப்பர்மன்' உருவங்கள் பொறித்த ஏழு நாணயக் குற்றிகளைக் கனடிய அரசு கடந்த மாதம் பாவனைக்கு விட்டுள்ளது. நகைச்சுவைக் (காமிக்ஸ்) கதைகளில் வரும் சூப்பர் நாயகர்களின் கதாபாத்திரங்கள் தோன்றிய எழுபத்தைந்தாவது ஆண்டின் பூர்த்தியை முன்னிட்டு இவை வெளியிடப்பட்டன. நீதி, நியாயம் மற்றும் உண்மைகளுக்குப் போராடிய கதாபாத்திரங்களான 'சூப்பர்மன்' நினைவான நாணயங்கள் தங்கம் மற்றும் வெள்ளியால் ஆனவை.

கிப்ளிங்கிலிருந்து கென்னடி வரை இயங்கும் சப்வே ரயில் சேவையை கென்னடியிலிருந்து ஸ்காபரோ சிவிக் சென்டர் வரை நீடிக்க ஒன்ராறியோ மாகாண அரசு முன்வந்துள்ளது. இதற்கென 1.4 பில்லியன் பணம் செலவிடப்படுமெனவும், முழுவதையும் மாகாண அரசாங்கமே செலவிடுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நீடிப்பு சப்வே ரயில் சேவையில் லோரன்ஸ் வீதியில் ஒரு தரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

றொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள சில குறிப்பிட்ட வர்த்தக நிலையங்களில் 'ஆன்லைன்' மூலம் பொருட்களை வாங்குவதற்கு பகல் 12 மணிக்கு முன்னதாக ஆடர் கொடுப்பவர்களுக்கு அன்றைய தினம் பிற்பகல் ஐந்து மணிக்கு முன்னர் அவைகளை விநியோகம் செய்ய கனடா தபால் திணைக்களம் (கனடா போஸ்ற்) முன்வந்துள்ளது. Walmart, Future Shop, Indigo, Best way ஆகிய நிறுவனங்களும் இத்திட்டத்தில் இணைந்துள்ளன.

## தீவகம் இராசலிங்கம் நான்கு நூல்கள் வெளியீடு

பத்திரிகையாளரும் கவிஞரும் எழுத்தாளருமான தீவகம் வே. இராசலிங்கம் அவர்களின் நான்கு நூல்களின் வெளியீட்டு விழா இந்த மாதம் 27ஆம் திகதி பிற்பகல் ஐந்து மணிக்கு ஸ்காபரோ 733 பேர்ச்மவுண்ட் வீதியிலுள்ள கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பள்ளம்புலம் திருமுருகன் பிள்ளைத்தமிழ், திருப்பொலி ஐயனார் செண்பகமாலை, தெய்வமும் தீந்தமிழும் (கீர்த்தனைப் பாடல்கள்), அகவைப்பா (கவிதையில் காலச்சுவடுகள்) ஆகிய நூல்களே இங்கு வெளியீடு காணவுள்ளன.

## முத்துவிநாயகர் ஆலயம் இடம் மாறுகிறது

றொறன்ரோ மத்திய பகுதியிலுள்ள பார்ளிமென்ட் வீதியில் பல வருடங்களாக அமைந்திருந்த முத்துவிநாயகர் ஆலயம் இந்த மாதம் இடம்மாறுகின்றது. றொறன்ரோவிலுள்ள ஜெராட் வீதியில் 600 இலக்க கட்டிடத்துக்கு (ஜெராட் & புரோட்வியு வீதிச் சந்திப்புக்கு அருகில்) இந்த மாத இறுதியில் இடம் மாறுவதாக ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

## 9 மாதங்களில் 45 கொலைகள்

றொறன்ரோ நகர பொலிஸ் பிரிவில் இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களிலும் நாற்பத்தைந்து கொலைகள் இடம்பெற்றுள்ளன இவற்றில் 19 துப்பாக்கிச் சூட்டினாலும், 13 கத்திக் குத்தினாலும், 13 கொலைகள் வேறு வன்செயல் வழிகளாலும் இடம்பெற்றுள்ளன. கடந்த ஆண்டு முழுவதிலும் இங்கு 41 கொலைகளே இடம்பெற்றுள்ளன. 2010ல் 45 கொலைகளும், 2011ம் ஆண்டில் 36 கொலைகளும் இடம்பெற்றன. இந்தப் புள்ளிவிபரங்களைப் பார்க்கையில் 2013ல் அதிக கொலைகள் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது.

## தற்கொலை எண்ணமுள்ளோரை கண்டறியும் ஒரு கருவி

உலகம் முழுவதும் ஒரு மில்லியன் ஆட்கள் வருடாந்தம் தற்கொலை செய்கின்றனர். தற்கொலை எண்ணம் கொண்டவர்களை இரத்தப் பரிசோதனை மற்றும் சில மரபணுக்களின் பரிசோதனை மூலம் கண்டறியும் கருவியொன்று விரைவில் அறிமுகமாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vote reveals Sri Lanka's unavoidable truth: Other voices must be heard

**BOB RAE**



The results are in for the provincial election in Sri Lanka's northern most province, the area around Jaffna, and they are clear as a bell: nearly 80 per cent of voters, despite much evidence of harassment, cast their ballots for the Tamil National Alliance.

The TNA has long been a parliamentary voice for Tamil nationalism, with a close, but complex, relationship to the LTTE and the military struggle. When the fighting was on, it was often hard to see much light between the Tigers and the parliamentarians. With the crushing defeat of the LTTE in May of 2009, more Tamil leaders inside Sri Lanka talked publicly of the need to "move on" and "deal with the realities on the ground."

With this decisive vote, choices will have to be made on all sides, recognizing that the current Sri Lankan constitution grants few powers to provincial councils, and that the leaders and organization that really run the country at the moment, the Rajapaksa family and the army, have never really embraced the plural and diverse nature of the country. The powers that are supposed to exist outside the reach of central control are there on paper, and not in reality. An election does not make a democracy on its own, and an election in the northern region hardly means that Sri Lanka has turned a corner.

After May, 2009, President Mahinda Rajapaksa, his brothers and the army have not exactly chosen the path of truth and reconciliation. Triumphalism would be more like it, and it is both the denial of the brutality of the end of the war and a complete failure to embrace diversity and a respect for human rights that has made the current government so controversial.

One suspects that neither the government nor the Tamil National Alliance expected such a clear result. But whether it changes anything remains to be seen. Jaffna and the regions around it remain under military occupation. The central government is reported to be offering land to Sinhalese soldiers in the north, which will only exacerbate the sense that ethnic cleansing is only a matter of time.

For many in the majority, it will seem the ultimate insult that their military victory has not brought worldwide approval and humble acceptance from the Tamil community that the path to self-determination was some kind of terrible mistake.

But life's not like that. The aspiration among Tamils for recognition and respect began decades ago, and did not die on the beach where Velupillai Prebhakaran and his supporters were killed. This election result confirms it, and means that thinking about devolution and power sharing has to start again. It is the unavoidable question at the heart of Sri Lankan politics, and the military detour after the collapse of the cease-fire in 2006 did nothing to resolve it. There are no doubt many in Sri Lanka – and other parts of the world – who find the return of pluralism and alternative voices a threat to the simplicity of majority rule. But simple answers are never good ones when it comes to governing complex societies.

Sri Lanka has a Buddhist, Sinhala speaking majority. But it also has significant Hindu, Christian, and Muslim minorities, most of who speak Tamil as their first language. And the political solidarity shown in the heartland of this complex community, even so much destruction and defeat, is a clear message to the Sri Lankan government and the world.

*Bob Rae is a former member of Parliament and former premier of Ontario. (Courtesy: Glob and Mail)*●

# Healing Sri Lanka begins with a new deal for Tamils

The Tamil National Alliance won a solid victory over the weekend in Sri Lanka's Tamil-majority Northern Province, giving it the credibility to lobby for political devolution and for sufficient funds to rebuild the shattered region.

Sri Lanka's Tamil heartland has finally regained its political voice, four years after a brutal civil war that tore apart the island. And its first priority speaks volumes: It is to help "war widows, orphans and the disabled," the region's chief minister-designate C.V. Wigneswaran says. The fighting claimed 80,000 lives or more, and left a lifetime of pain in its wake.

This is a critical milestone for Sri Lanka and its 20 million people, as the Star's Rosie DiManno HYPERLINK "http://www.thestar.com/news/world/2013/09/22/sri_lanka_election_shows_tamils_reject_the_status_quo.html" \t "_blank"has been reporting from the Tamil-majority Northern Province. And it is one the large Tamil diaspora in Canada can celebrate.

The Tamil National Alliance won a solid victory Saturday in areas ravaged by 25 years of civil war, taking 30 of 38 seats on the advisory provincial council with a healthy 68-per-cent turnout. That gives the council the credibility to lobby for more political autonomy, funding and civil rights. The status quo will no longer do.

While the result is a rebuff for Sri Lankan President President Mahinda Rajapaksa, it is also a win for democracy in a country that is dominated by 13 million Sinhalese but which has a strong Tamil minority of 3 million. It offers the prospect of the much-needed national reconciliation that Prime Minister Stephen Harper's government has been urging. Wigneswaran, a former Supreme Court justice and a moderate, hopes to strike up a constructive partnership with the central government after years of Tamil Tiger insurgency, military occupation and debilitating direct federal rule.

Tamils yearn for the day when their homeland is not ruled from Colombo, through an appointed governor who dominates the advisory council. They envisage a new power-sharing deal. "We are for an undivided Sri Lanka, where there is ( Contd. on Page 08)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# கை கால்களில் விறைப்பு எரிவு வலிகள்

'இரும்பிலைதான் குசினிச் சாமான்களை எல்லாம் வாங்கி வைக்க வேணும் போலை கிடக்கு. சாப்பாட்டு பிளேட் கப் கிளாஸ் என்று ஒண்டும் மிச்சமில்லாமல் போட்டு உடைக்கிறாள்'

தனது மனைவிமேல்தான் அவருக்கு அவ்வளவு கோபம். அவளும் கோபக்காரியா? திரைப்படங்களில் காண்பது போல ஆவேசமான மனைவியா என்று எண்ணி அவளது முகத்தைப் பார்த்தேன். சாந்த சொரூபியாகத்தான் தோற்றமளித்தாள். சாந்தசொரூபி போட்டு உடைப்பது ஏன்?

**விறைப்பு எரிவு வலிகள்**

உடலின் சில குறிப்பிட்ட பகுதிகளில் விறைப்பது போல அல்லது உணர்விழந்தது போன்ற உணர்வு ஏற்படுவது புதினமானது அல்ல. கையை எங்காவது இசகு பிசகாக வைத்து தூங்கிக் காலை விழித்து எழுந்தவுடன் அவ்விடம் விறைத்தது போலவும், கூச்சம் போல அல்லது அதிர்வு போலவும் தோன்றுவதை உதாரணம் கூறலாம்.

ஆனால் இது கைகளில்தான் ஏற்படும் என்பதல்ல. கைகளில் கால்களில் விரல்களில் மேல்கைகளில் தொடைப்புறத்தில் தோள் பட்டையில் என உடலின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் தோன்றலாம்.

**சுவாரஸ்யமான காரணங்கள்**

மருத்துவ மாணவர்களாக இருந்த காலத்தில் Honeymoon palsy என விரிவுரையாளர் கற்பிக்கும்போது கிளர்ச்சியடைந்தோம். திருமணமான முதலிரவில் புது மனைவியுடன் கலந்து கலந்து களைத்து அவளும் சோர்ந்து உங்கள் கைகளிலேயே தலை வைத்துத் தூங்கியிருப்பாள். காலையில் விழித்து எழும்போது உங்கள் பெருவிரலும், சுட்டி விரலும் நீட்டி மடக்க முடியாதபடி மரத்துக் கிடப்பதைக் கண்டு பதறுவீர்கள். ராசி அற்ற பெண் என மனதுள் திட்டுவீர்கள். இது median nerve நீண்ட நேரம் அழுத்தப்பட்டதால் ஏற்பட்டதாகும். தானாகவே குணமாகும்.

இதே போன்றதே Saturday night palsy என்பதுவுமாகும். வார இறுதிநாள் போதையில் கதிரையின் கைப்பிடியில் கை போட்டபடி தூங்கியபின் காலை விழித்தெழும்போது radial nerve அழுத்துப்படுவதால் ஏற்படுவதாகும்.

**வேறு பல காரணங்கள்**

மேலே கூறிய கிளுகிளுப்பான காரணங்கள் தவிர, வேறு ஏராளமான காரணங்கள் இருக்கவே செய்கின்றன.

ஒரே இடத்தில் நீண்ட நேரம் உட்கார்ந்திருக்கும்போது, அதுவும் காலுக்கு மேல் கால் போட்டு உட்கார்ந்திருக்கும்போது மரப்பதற்கான சாத்தியம் அதிகம். ஆனால் இது தற்காலிகமானது. சிறிது நேரத்தில் குணமாகிவிடும்.

முள்ளந் தண்டு எலும்புகள் தேய்ந்து, முண்நாணிலிருந்து வெளியே வரும் நரம்புகளை அழுத்துவதாலும் ஏற்படும். கழுத்து எலும்புகளில் ஏற்படும் தேய்வானது கைகளில் எரிவு, மரத்தல் போன்ற அறிகுறிகளைக் கொண்டு வரும்.

அதேபோல நாரிப்பகுதி முள்ளந் தண்டு பாதிப்புறுவதால் ஏற்படும் வலி விறைப்பு போன்றவை கால்களில் வெளிப்படும்.

நரம்புக் கொப்பளிப்பான் பற்றி அறிந்திருப்பீர்கள். ஏதாவது ஒரு நரம்பின் பாதையில் மட்டும் கொப்பளங்கள் தோன்றும். இதனால் வலி எரிவு போன்ற பாதிப்புகளை அந்த நரம்பின் பாதையில் மட்டுமே கொண்டுவரும். சிலரில் இந்த வலியானது கொப்பளங்கள் கருகி நோய் மாறிய பின்னரும் நீண்ட காலத்திற்கு தொடரும்.

சிலரில் பெருவிரல் சுட்டு விரல், நடுவிரல் அடங்கலான கைகளின் வெளிப்புறத்தில் வலி, விறைப்பு போன்ற அறிகுறிகள் இருக்கும். இதை Carpal tunnel syndrome என்பார்கள். இது மணிக்கட்டின் உட்புறம் ஊடாக உள்ளங்கை மற்றும் விரல்களுக்கு வரும் நரம்பு அழுத்தப்படுவதால் வருவதாகும். பொதுவாக மூட்டுவாதம், தைரொயிட் நோய்கள், அதீத எடை போன்றவை இருப்பவர்களில் அதிகமாக ஏற்படும்.

கட்டுரையின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட பெண்ணுக்கு இருந்தது இந்த நோய்தான். அடிப்படைக் காரணத்தை கண்டறிந்து சிகிச்சை செய்ய வேண்டும். இவருக்கு அவ்விடத்தில் ஊசி போட நேர்ந்தது. வேறு சிலருக்கு நரம்பில் ஏற்படும் அழுத்தத்தை நீக்க சிறிய சத்திர சிகிச்சையும் தேவைப்படுவதுண்டு.

**நீரிழிவு**

'எங்கை அப்பா ஒரு செருப்பை விட்டிட்டு வந்தனீங்கள்' மனைவி நக்கலாகக் கேட்டதும் குனிந்து பார்த்தார் ஆம் ஒரு காலில் செருப்பைக் காணவில்லை. ஒரு காலிலிருந்த செருப்பு கழன்று விடுபட்டதை அறியாமல் நடந்து வந்திருக்கிறார். இதற்குக் காரணம் காலின் உணர்திறன் நரம்புகள் பாதிப்புற்றதுதான்.

கால்கள் மெத்தைபோல இருப்பதாக இவர்கள் சொல்லுவார்கள். தார் ரோட்டில் கால் வைத்தாலும் சுடாதளவு விறைப்பு உள்ளவர்கள் காலில் பெரும் புண்களோடு வருவார்கள். கோயிலிலும் கடற்கரையில் வெறும் காலுடன் நடக்கும்போது முள்ளு ஆணி கிளாஸ் துண்டு ஏதாவது குத்தி ஏறியிருக்கும். உள்ளுக்குள் கிடந்து சீழ்பிடித்து மனைந்தபின்தான் அவர்களுக்கே தெரியவரும்.

கால்கள் மரத்துப்போவது மாத்திரமன்றி சிலருக்கு எரிவு உழைவு போன்ற வேதனைகளும் இருக்கலாம். விற்றமின் குறைபாடு, தொழுநோய் அடங்கலான பல்வேறு நோய்கள் காரணமாக இருக்கலாம். ஆனால் நாம் அதிகமாகக் காண்பது நீரிழிவு நோயாளரில்தான். நீரிழிவாளர்களில் கால்களில் விறைப்பு வந்துவிட்டால் முற்றுமுழுதாக மாற்றுவது கஷ்டம். ஆரம்ப காலம் என அலட்சியப்படுத்தாது நீரிழிவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதே இது வராமல் தடுக்கக் கூடிய ஒரே வழியாகும்.

**பக்கவாதம்**

பக்கவாதம் வரும்போது அங்கங்கள் செயலிழப்பது மட்டுமின்றி எரிவு, விறைப்பு போன்ற உணர்திறன் பாதிப்புகளும் ஏற்படுவதுண்டு. அதேபோல வலிப்பு நோய் வருபவர்களிலும் நரம்புகள் பாதிப்பு ஏற்பட்டு விறைப்பு எரிவு போன்ற அறிகுறிகள் ஏற்படுவதுண்டு.

பக்கவாதம் போலவே தோன்றி மறையும் வாதம் எனவும் ஒன்று உண்டு. பக்கவாதம் போலவே கை கால்கள் செயலிழத்தல், மயக்கம் வருதல் போன்ற அறிகுறிகள் தோன்றி எந்தவித சிகிச்சையும் இன்றி தானே மறைந்து விடும். இதனை மருத்துவத்தில் Transient ischemic attack (TIA), அல்லது 'mini-stroke' என்பர். குணமாகிவிட்டது என நிம்மதியாக இருக்க முடியாது. இத்தகையவர்களுக்கு முழுமையான பக்கவாதம் வருவதற்கான சாத்தியம் அதிகம் என்பதால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

கால்களில் விறைப்பு ஏற்படுவதற்கு விட்டமின் பீ12 (Vitamin B12) குறைபாடு ஒரு முக்கிய காரணமாகும். இது முக்கியமாக மீன், இறைச்சி, ஈரல், சிறுநீரகம், பால் போன்றவற்றில் காணப்படுகிறது. இதனால் தாவர உணவு மட்டும் உண்பவர்களில் இது வருவதற்கான வாய்ப்பு அதிகமாகும். கால் விறைப்பு மட்டுமின்றி, இரத்த சோகை, வாயில்

(30ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# எதிர்பாராதது

வாழ்க்கை என்பது எதிர்பாராத கணங்களினால் நிறைந்தது. உலகத்திலேயே ஆகச் சிறிய சிறுகதையை எழுதியவர் ஏர்னஸ்ட் ஹெமிங்வே. அந்தச் சின்னஞ்சிறு கதை உச்சத்தை எட்டியது அதனுடைய எதிர்பாராத முடிவினால். ஆறே ஆறு வார்த்தைகள். 'விற்பனைக்கு. குழந்தையின் சப்பாத்து. புத்தம் புதிது. அணியப்படவேயில்லை.'

சிவாஜியும் பத்மினியும் நடித்த 'எதிர்பாராதது' திரைப்படம் 1950 களில் வெளிவந்தது. படத்திலே சிவாஜியும் பத்மினியும் காதலர்கள். நாகையா இரண்டாம் தாரமாக பத்மினியை மணந்து கொள்கிறார். சிவாஜி நாகையாவின் மகன் என்பதால் இப்போது சிவாஜிக்கு பத்மினி சிற்றன்னை முறையாகி விடுகிறார். நாகையா இறந்துபோக ஒருநாள் சிவாஜி பத்மினியை தொடுகிறார். பத்மினி உணர்ச்சிவசப்பட்டு சிவாஜியை அடித்த அடியில் அவருடைய கன்னம் வீங்கி அவர் மூன்று நாட்களாக படப்பிடிப்புக்கு வரவில்லை. மூன்றாவது நாள் சிவாஜியை பார்க்க பத்மினி அவர் வீட்டுக்கு போய் சமாதானம் செய்து சிவாஜிக்கு புத்தம்புது ஃபியட் கார் ஒன்றை பரிசாகக் கொடுக்கிறார். அதுதான் சிவாஜியுடைய முதல் கார். எதிர்பாராத அடி; எதிர்பாராத பரிசு.

சமீபத்தில் ரொறன்ரோவில் ஒரு பொலீஸ்காரரைச் சந்தித்தேன். திரண்ட புஜமும் ஒடுங்கிய வயிறுமாக கம்பீரமாக இருந்தார். பொலீஸ்காரர்களின் உதடு எப்பவும் ஒட்டியபடியே இருக்கும். இவர் அப்படியல்ல. நட்பு நிறைந்த முகம். அன்பாகவும் வெளிப்படையாகவும் பேசினார். அவர் வாழ்க்கையில் நிறைய குற்றவாளிகளுடன் பழகியிருக்கிறார். சிறை, நீதிமன்றம், வழக்கு, வழக்கறிஞர்கள் என்று பல வருடத்து அனுபவங்கள் அவரிடம் கொட்டிக்கிடந்தன. 'உங்கள் வாழ்க்கையில் ஏராளமான சம்பவங்களை சந்தித்திருப்பீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒன்று எப்போவாவது நடந்ததுண்டா?' என்றேன். 'எப்போவாவது அல்ல; தினம் தினம் அப்படி ஒன்று நடக்கும்' என்றார். ஒருநாள் இவர் சோமாலியாக்காரர் ஒருவரை நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றார். அவர் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர். அவருடைய குற்றம் கொதிக்கும் எண்ணெயை மனைவியின் முகத்தில் ஊற்றியது. அரசு தரப்பு வழக்கறிஞரும் எதிரி தரப்பு வழக்கறிஞரும் தங்கள் தங்கள் வாதங்களை வைத்தனர். அரசு தரப்பு வழக்கறிஞர் எதிரிக்கு குறைந்தது 6 மாதம் தண்டனை கொடுக்கவேண்டும் என்று கேட்டு தன் வாதத்தை முடித்தார். எதிரி தரப்பு இது முதல் குற்றம் அத்துடன் கணவன் சிறைக்கு சென்றால் குடும்பம் வருமானம் இன்றி கஷ்டப்படும். ஆகவே இரண்டு மாதத்துக்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கவேண்டாம் என்று மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டது.

நீதிபதி தீர்ப்பு வழங்குமுன்னர் வழமைபோல குற்றவாளியை பார்த்து அவர் ஏதாவது சொல்ல விரும்புகிறாரா என்று கேட்டார். அந்த மனிதர் இப்படிப் பேசினார். 'கனம் ஐயா. நான் நன்மைதானே செய்திருக்கிறேன். எனக்கு எப்படி தண்டனை வழங்கலாம்? குழந்தைகள் வீட்டிலே பசியால் அழுதார்கள். என் மனைவி சமைக்கவில்லை. ஆகவே அவளைத் திருத்துவதற்காக கொதிக்கும் எண்ணெயை ஊற்றினேன். அது என் கடமை. உண்மையில் நான் நன்மை செய்தேனே ஒழிய தீமை செய்யவில்லை.' நீதிபதி இதை எதிர்பார்க்கவில்லை. அவர் இப்படி தீர்ப்பு வழங்கினார். 'உங்களுக்கு இரண்டு வருடத்தில் ஒருநாள் குறைத்த காலம் சிறைத்தண்டனை வழங்குகிறேன். நீங்கள் ஆங்கில ஆசிரியர். கனடாவின் அரசியல் சட்டத்தை முறையாகப் படித்து நீங்கள் புலமை பெறவேண்டும் என்பது என் விருப்பம். அதற்கு இந்தக் கால அவகாசம் உங்களுக்கு உதவியாக இருக்கும்.' சோமாலிய ஆசிரியர் இந்த தீர்ப்பை நிச்சயமாக எதிர்பார்த்திருக்கமாட்டார்.

1993களில் ஒரு வழக்கு கனடாவில் பிரபலமாகியிருந்தது. கனடாவில் மட்டுமல்ல உலகமே அந்த வழக்கு விவரங்களை உடனுக்குடன் அறிய ஆவல் காட்டியது. குற்றவாளியின் பெயர் போல் பெர்னாடோ. 30 பெண்களுக்கு மேல் வல்லுறவு கொண்டவன். மூன்று பெண்களைக் கொலை செய்தவன். இதற்கு அவனுடைய மனைவி உடந்தையாக இருந்தாள். கணவன் பெண்களை சித்திரவதை செய்யும்போது மனைவி அதை வீடியோ படம் பிடித்தாள். மனைவி செய்யும்போது அவன் வீடியோ படம் பிடித்தான். ஓய்வாக இருக்கும் சமயங்களில் இருவரும் கொடூரமான வீடியோக்களை கண்டு களித்தனர். கணவன் மனைவி இருவருமே படித்தவர்கள். நல்ல வேலையில் வேறு இருந்தார்கள்.

போல் பெர்னாடோ என்ற காமக் கொடூரனை தினமும் கோர்ட்டுக்கு அழைத்துவரும் பொறுப்பு பொலீஸ்கார நண்பருக்கு. 1993ம் வருடம் இந்த வழக்கு விசாரணை உச்சத்தை அடைந்தது. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு புதிய தகவல் குறுக்கு விசாரணையில் வெளிப்பட்டு உலகத்தை கவனிக்க வைத்தது. அந்த வருடம்தான் ரொறன்ரோ Blue Jays அணி பேஸ்போல் இறுதிப் போட்டிக்கு தயாரானது. போட்டி நாள் ஒக்டோபர் 23 சனிக்கிழமை. அன்றைய போட்டியில் உலக சாம்பியன் யார் என்ற முடிவு தெரிய வரும்.

பொலீஸ்காரர் குற்றவாளியை அழைத்துக்கொண்டு கோர்ட்டுக்கு வந்தார். ஒரு குதிரை நடப்பதுபோல தலையை தூக்கிக்கொண்டுதான் அவன் நடப்பான். எல்லோருடைய மனதிலும் குற்றவாளிக்கு ஆயுள்தண்டனையா, மரணதண்டனையா அல்லது விடுதலையாகி விடுவானா என்று ஒரே பதற்ற நிலை. கோர்ட் சமீபமாக வந்தபோது போல் பெர்னாடோ பொலீஸ்காரரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டான். அவன் மனம் முழுக்க அந்தக் கேள்விதான் நிறைந்து கிடந்தது. 'நாளைக்கு Blue Jays அணியில் ஜோ கார்ட்டர் home run அடித்து வெற்றி பெற்றுக் கொடுப்பானா?' அவனுடைய கவலை அது ஒன்றுதான். நண்பர் பதில் பேசவில்லை. ஆனால் உண்மையில் அடுத்த நாள் ஜோ கார்ட்டர் கடைசி நேரத்தில் home run அடித்து உலக சாம்பியன் பட்டத்தை பெற்றுக்கொடுத்தது சரித்திரம். இப்படி எதிர்பாராத சம்பவங்கள் தினம் தினம் கோர்ட்டில் நடைபெறுவதுண்டு.

ஏர்னஸ்ட் ஹெமிங்வே எழுதிய சிறுகதையிலும் பார்க்கச் சின்னதான ஒரு சிறுகதையை சமீபத்தில் அமெரிக்க மாணவி ஒருத்தி எழுதியிருக்கிறார். ஐந்தே ஐந்து வார்த்தைகள்தான். 'ஓ கடவுளே' நான் கர்ப்பமாகிவிட்டேன். யாராயிருக்கும்?'

எதிர்பாராத சம்பவம் சிலவேளை வாழ்க்கையை பின்னே தள்ளும். சில சமயம் முன்னுக்கு எடுத்துச் செல்லும். வாழ்க்கை பெண்டுலம் போலத்தான். முன்னுக்கும் பின்னுக்குமாக நகரும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

36

மனம் எங்கே உள்ளது, அது எப்படியெல்லாம் இயங்கும் என்றெல்லாம் இன்றும் நாம் குழப்பம் அடைந்து கொண்டிருக்கின்றோம். ஆனால், உளவியலின் தந்தை என கருதப்படும் சிக்மண்ட் ப்ராய்ட் (1856-1939) என்ற அறிஞர் மனநோய்கள் பற்றி ஆராய்ந்து வெளியிட்ட உளப்பகுப்பாய்வு (Psychoanalysis) கோட்பாடே இன்று எமது மனம் இயங்கும் முறை பற்றி அறிய உதவுகிறது. இவர் எமது மனம் செயல்படும் முறையினை மூன்று வகைகளில் பிரித்துள்ளார். முதலாவது வகை உணர்வுந்தல் அல்லது ஆழ்மன உந்தல் என கூறி இதனை இட் (ID) எனவும் கூறியுள்ளார். இரண்டாவதுவகை தன்முனைப்பு, ஆணவம் அல்லது அகம்பாவம் என கூறி அதனை ஈகோ (EGO) எனவும் கூறியுள்ளார். மூன்றாவது வகை மேல்மனம் அல்லது அதியகம் (Superego) எனவும் கூறியுள்ளார். மனதின் செயல்பாடுகளை முதலில் வகைப்படுத்தியவர் இவரேயாவர்.

முதலாவது மனமான இட் (ID) என்பது பண்பாடு அற்ற திடீர் மனநிலையாகும். தான் நினைத்ததையே அடைய முயலும் மனம் இது. உதாரணமாக பசியுடைய ஒருவர் எதையாகிலும் எந்த வழியிலும் கண்டவுடனே பசியாற முயல்கின்றார். பிறப்புடன் கூடவரும் இவ்வகையான மன உந்தல் உடன் மகிழ்ச்சி கொள்வது. எத்தகைய விளைவுகளையும் இந்த மனம் எண்ணுவதில்லை. கோபம், தாகம், பாலுணர்வு எல்லாமே இதில் அடங்கும்.

இரண்டாவது மன செயல்பாடு ஈகோ (EGO) என்பதாகும். இதுவும் ஒருவகை முழுமையடையாத மன உணர்வுதான். சமூக நிகழ்வுகளில் அதிகமாக இது செயல்படும். இதன்போது பசியுடைய ஒருவர் உணவு கிடைத்தபோது மட்டும் அதனை உட்கொள்ளுகிறார். இதுவும் தானாகவே செயல்படும். அதுவும் தன்முனைப்பின் மூலமே மனம் செயல்படுகிறது.

மூன்றாவது மன செயல்பாடு சுப்பர் ஈகோ (Superego) எனப்படும். இத்தகைய மனநிலை மனச்சாட்சியுடன் செயல்படும். சரி எது, பிழை எது என கண்டறியும் மனம் இதுவாகும். தவறுகளை செய்யும்போது இந்த மேல்மனமே இடித்துரைக்கிறது. சமூக நியமங்களை ஏற்றுக் கொள்ளும் மனநிலை இங்கு பிறக்கிறது. தேவையான உணவை சரியான வழியில் அடைந்து உண்ணக் கூறும் மனநிலையே இதுவாகும்.

மேற்கூறிய மூன்று மனநிலைகளும் எமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தோன்றுவன. சுற்றுப்புற சூழ்நிலைகளின் ஆதிக்கத்தை எதிர்த்தோ அல்லது இணைந்து கொண்டோ வாழ நாம் தயாராக இருக்க வேண்டும். நல்ல மனநிலை பெறாதவர்கள் தோல்வியை தழுவவும், நல்ல மனநிலை உள்ளவர்கள் வெற்றி பெறவும் மனநிலையே மிகவும் பிரதானமாகிறது. நல்ல மனநிலை தோன்றாத வேளையில் எண்ணத்திலும், உணர்ச்சியிலும், செயலிலும் வேறுபாடுகள் உண்டாகி மனம் குழப்பமடைந்து மனநோய்களுக்கு உள்ளாகி விடுவோம். 'மனநோய்' கடவுளால் கொடுக்கப்பட்டதல்ல அது. இயற்கைக் காரணிகளால் ஏற்படுகிறது என்பது சிக்மன்ட் ப்ராய்டு அவர்களின் திட்டவட்டமான நம்பிக்கையாகும்.

"மனச்சாட்சியுள்ள மனமே நமக்கு வேண்டும்"
மீண்டும் தொடர்வேன்...

## 'புறொஸ்ரேற்' பரிசோதனை 40 வயதுக்குப் பின்னர் அத்தியாவசியம்

ஆண்களின் அதிவேக உயிர்கொல்லி நோயாக மாறிவரும் 'புறொஸ்ரேற்' நோயைக் கட்டுபடுத்துவதற்காக ஆண்கள் ஒவ்வொருவரும் 40 வயதானவுடன் அதற்கான Prostate Specific Antigen எனப்படும் வைத்திய பரிசோதனையை மேற்கொள்ள வேண்டுமென ஆலோசனை வழங்கப்படுகின்றது. கனடியர்களில் 34 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் 87 வீதமானோர் இந்நோய்க்கான அறிகுறி அச்சத்தை வெளியிட்டதே இதற்குக் காரணம். ஒவ்வொரு வருடமும் கனடிய ஆண்களில் 23,600 பேர் இந்த நோய்க்கு ஆளாவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## Healing Sri Lanka...

a certain amount of (Tamil) self-rule under the federal constitution," says Wigneswaran. That modest demand — a far cry from the secession for which the Tigers fought until they were destroyed – now enjoys the support of most voters. And Rajapaksa would be wise to heed it

Since the end of the fighting Rajapaksa has been criticized by the United Nations, Canada and others for failing to fully probe what the UN calls "credible allegations" of war crimes, for obdurately refusing to devolve any substantial power, and for militarizing the north. That tough line will be harder to sustain after this election.
Sri Lanka's constitution provides for power-sharing with provincial councils, and the TNA HYPERLINK "http://tnapolitics.org/en/policies/northern-provincial-council-manifesto/" \t "_blank"election platform calls for demilitarization, repatriation of internal refugees, redevelopment, and more local autonomy over land use, law and order, health and education, resources and finances.

There is nothing radical in this. Tamils have long been promised "substantive" autonomy, plus stronger minority rights and a fair share of jobs in the civil service and military.

Now that Colombo has a democratic, moderate Tamil political partner, the time has come to make good on those promises.

(Toronto Star Editorial – 2013, Sept. 26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# ஒன்ராறியோ கல்வி அளவீட்டு முறை மாற்றங்கள்
# Changes to Grading Outlines

இற்றைக் காலம்வரை மாணவர்களின் தேர்ச்சி அறிக்கையில் கற்றல் திறன்கள் (Learning Skills) என்ற ஒரு அடைப்புக் குறியில் மாணவர்களின் கற்றல் திறன்களை விளக்கியிருப்பதைக் கண்டிருப்பீர்கள். எந்த ஒரு ஒப்படையை மாணவர்களுக்கு வழங்கும் பொழுதும் அதற்குரிய புள்ளிகள் எவ்வாறு வழங்கப்படும் என்பதனை விலாவாரியாகப் பிரித்து எழுத்து மூலம் ஒப்படைக்குரிய வினாவுடன் கொடுக்க வேண்டியது கட்டாயமான ஒரு விடயம். இப் புள்ளிகளை வழங்கும்பொழுது கற்றல் திறன்களை அவதானித்து புள்ளிகளைக் குறைப்பதற்கான வசதியும் இருந்தது. அதாவது கற்றல் திறன்களாகிய - கூட்டாகச் செயல்படுதல் (Team work), நேரம் தவறாமை (Puntuality), செய்யும் முறை (Work ethic), ஒழுங்காக வருகை தருதல் (Attendance), பங்குபற்றல் (Participation), மனப்போக்கு (Attitude) ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டன.

சில மாணவர்கள் ஒரு குழுவாகச் செயல்படும்பொழுது ஒத்துழைக்க மாட்டார்கள். தமக்குரிய பங்கு வேலையைச் செய்யாமல் இழுத்தடித்து ஒப்படையை செய்து முடிக்க முடியாமல் ஏனைய குழு அங்கத்தவர்களையும் கஷ்டப்படுத்துவார்கள். சில மாணவர்கள் ஒழுங்காக வகுப்புக்கு வரமாட்டார்கள், குறித்த நேரத்தில் ஒப்படையை ஆசிரியரிடம் கையளிக்க மாட்டார்கள். இவையெல்லாம் எதிர்கால தொழில் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. அத்துடன் பாடசாலையின் ஒழுங்கான கல்விப் போதனைக்கும், மாணவர்களின் வெற்றிக்கும் இன்றியமையாதவை.

இத்தகைய ஒரு முக்கிய விடயமாக இற்றைவரை இருந்துவந்த கற்றல் திறன்கள் சம்பந்தமாகக் கல்வி அமைச்சு அண்மையில் வெளியிட்ட ஒரு அறிக்கை ஆசிரியர்களின் கைகளைக் கட்டிப் போட்டுள்ளது. Growing Success; Assessement Evaluation, and Reporting in Ontario Schools என்ற இந்த அறிக்கையின்படி ஒரு மாணவனின் அளவீடுகளை நிர்ணயிக்கும்பொழுது கற்றல் திறன்களை கருத்தில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை எனக் கூறுகிறது. இதன் விளக்கம் யாதெனில் மாணவர்கள் வகுப்புக்கு நேரம் தாழ்த்தி வரலாம், குழப்படி செய்யலாம், வகுப்புக்கு ஒழுங்காக வருகை தரத் தேவையில்லை, குறித்த திகதிக்கு ஒப்படைகளைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை, சக மாணவர்களோடு ஒத்துழைத்து ஒப்படைகளைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்று மாணவர்கள் அர்த்தம் கற்பிக்கப் போகிறார்கள்.

தான்தோன்றித்தனமாகச் செயல்படும் மாணவர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர உதவுவது "புள்ளிகள்" என்ற ஒரு ஆயுதம்தான். அதிலும் புள்ளிகளை குறைக்கவோ கட்டுப்படுத்தவோ ஆசிரியர்கள் பிரயோகிக்கக்கூடிய ஒரு மிரட்டல் இந்தக் கற்றல் திறன்கள்தான். இந்தப் புதிய கொள்கையால் மாணவர்கள் எல்லாக் குழப்படிகளையும் செய்துவிட்டு நல்லதொரு திறமான ஒப்படையை சமர்ப்பித்துவிட்டால் அவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் வழங்கப்பட்டேயாக வேண்டுமென கல்வி அமைச்சு ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கிறது. ஆசிரியர்கள் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவது எவ்வாறு என்பது தெரியவில்லை.

இந்தக் கொள்கையில் மேலதிக விளக்கம் ஒன்றும் காணப்படுகிறது. அதாவது Learning skills can be assessed but not evaluated. அதாவது கற்றல் திறன்கள் மதிப்பிடப்படலாம், ஆனால் அவற்றுக்கு மதிப்பு எண்கள் வழங்கப்படக்கூடாது என்பதாகும். இது ஆசிரியர்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. Assessed - என்றால் அளவீடு செய்தல் - உதாரணமாக 25 சொற்களைக் கூறியபொழுது 20 சரியாக எழுதினார் எனக் கூறுதல். Evaluation என்பது 25 சொற்களில் 20 சரியாக எழுதினார். ஆகவே இந்த மதிப்பெண்கள் அவருக்கு வழங்கப்படுகிறது, அல்லது good, bad, excellent என மதிப்பீடு செய்தல். ஆகவே கல்வி அமைச்சு கூறுவதுபோல் கற்றல் திறன்களுக்கு மதிப்பு எண்கள் வழங்கப்படுவது முறையல்ல. Learning the course content – பாடத்தின் உள்ளடக்கத்தை மாணவர்கள் கற்றல்தான் முக்கியம். அதனை எவ்வாறு விளங்கிக் கொண்டார்கள் எனப் பரீட்சைகள் மூலம் அறிந்து புள்ளிகள் வழங்குவதுதான் மதிப்பு எண்கள் வழங்கும் சரியான முறை என நாம் ஏற்றுக் கொண்டாலும், மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க உதவும் கற்றல் திறன்களையும் கருத்தில் கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கத்தான் வேண்டும். கற்றல் திறன்களைப் பேணாத மாணவர்கள் பாடசாலை வாழ்க்கையில் ஒழுங்கீனமாக நடப்பதோடு மாத்திரம் நின்றுவிட மாட்டார்கள். இங்கு கல்வி நிலையங்களிலும், வேலைத் தளங்களிலும் கடைப்பிடிக்க முற்பட்டு வாழ்க்கையில் தோல்விகளைச் சந்திக்க இந்த கொள்கை வழிவகுக்கப் போகிறது.

இந்தக் கொள்கையின் வேறு ஒரு குறைபாடு யாதெனில் - Grades should reflect the students with consistent level of achievement with special consideration given to more recent evidence – அதாவது மாணவன் மிகவும் அண்மையில் எவ்வாறு செயற்பட்டான் என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதாகும். உதாரணமாக ஒரு மாணவன் முதல் அரை ஆண்டில் 50 புள்ளிகளையும், இரண்டாம் அரை ஆண்டில் 90 வீத புள்ளிகளையும் பெற்றால் - 90 வீத புள்ளிகளையே கருத்தில் கொள்ள வேண்டும் என்பதாகும். சில மாணவர்கள் முதல் அரை ஆண்டில் 90 வீத புள்ளிகளைப் பெற்றுவிட்டு பின் இரண்டாம் அரை ஆண்டில் 50 வீத புள்ளிகளை ஒரு நோய் காரணமாகவோ, சொந்தப் பிரச்சனை காரணமாகவோ பெறுவார்களேயானால் அவர்களின் கதி என்ன. இத்தகைய ஒரு முறை வேலைத் தலங்களிலோ, அன்றேல் பல்கலைக்கழகங்களிலோ நடைமுறையில் இருக்கப் போவதில்லை. பாடசாலை என்பது எதிர்கால வாழ்க்கைக்கு வழி அமைத்துக் கொடுக்கும் ஒரு இடமாக இருக்க வேண்டும். மாணவர்கள் மனதில் தப்பான அபிப்பிராயங்களை வளர்த்துக் கொடுக்கும் ஒரு இடமாக அமையக்கூடாது.

கல்விக் கொள்கைகளை உருவாக்கும் திறமைசாலிகள் (experts) தமது கொள்கைகளை நடைமுறைப்படுத்திய பின்புதான் அதிலுள்ள பிழைகளை உணர்கிறார்கள். அதேபோல் - Growing Success Assessment Evaluation and Reporting in Ontario என்ற இந்தப் புதிய கொள்கையின் தாக்கம் ஒரு சில வருடங்கள் பாவனையில் இருந்த பின்புதான் தெரியவரும். எந்த ஒரு கொள்கையும் மாணவர்களின் தன்மையை மனதில் கொண்டுதான் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் இந்தக் கொள்கை வேலைத்தலத்திற்கோ, எதிர்கால வாழ்க்கைக்கோ நன்மை பயக்கமாட்டாது. ஒரு சோம்பல்மிக்க, கட்டுப்பாடற்ற மாணவர் சமுதாயத்தை உருவாக்க வழிவகுக்கப் போகிறது. ஆசிரியர்களின் கற்பித்தலையும், அளவீட்டு முறைகளையும் கடினமாக்கப் போகிறது. காலம்தான் இதற்குப் பதில் சொல்லும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# பீட்ஸா!

வட்ட வடிவ பீட்ஸா ஏன் சதுர பெட்டியில் வருகின்றது? சாப்பிடத் தெரிந்த பலரின் அறிவை ருசிக்க வைக்கும் இக் கேள்வி இப்பொழுது முகநூலில் வேகமாகப் பரிமாறப்படுகின்றது.

தனித்தன்மை, பாரம்பரியம், வடிவங்களின் வடிவு, பீட்ஸாவை வட்டமாகவும் பெட்டியைச் சதுரமாகவும் செய்வது சுலபம், சதுரப் பெட்டியை மடிப்பது இலகு, எடுத்துச் செல்ல வசதி, பீட்ஸாவை மூலையிலிருந்து எடுப்பதில் சிரமமின்மை, வட்டப் பெட்டியை விட சதுரப் பெட்டியின் விலை மலிவு போன்ற விதம் விதமாக பதில்கள் அதே முகநூல் பக்கத்தில் ஜீரணமடைகின்றன.
அதனாலென்ன? யாரறிவர்? who cares? எனப் பசி மயக்கத்தில் அல்லது அவசரத்தில் சூடாகச் சொல்பவர்களும் அங்குளர்.

வருடாவருடம் அக்டோபர் மாதம் பீட்ஸா மாதம் என அமெரிக்கர்களால் புசிக்கப்படுகின்றது. இந்த மாதத்தில் வெவ்வேறு சுவையுள்ள பீட்ஸாவை தினத்திற்கு ஒன்றாக 'வயிறுமுட்ட' உண்பது அமெரிக்கர்களுக்கு வாடிக்கை. அல்லது வேடிக்கை.

1889ல் இத்தாலியின் மகாராணியாக இருந்த மகரிட்டாவை கௌரவிக்கும் வகையில் விசேட விருந்தாக அறிமுகம் ஆனதே பீட்ஸா என்ற சுவையுணர்வு. இத்தாலியின் தேசியக் கொடியின் நிறங்களான சிவப்பை தக்காளியும் (tomato) பச்சையை ஓமமும் (basil) வெள்ளையை பாலாடைக்கட்டியும் (mozzarella cheese) குறிக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டது.

இதுவே உலகின் முதலாவது பீட்ஸா என்ற நம்பிக்கை சூடும் சுவையும் குறையாமல் பலரிடம் இன்னமும் இருக்கின்றது.

விறகுகளுக்குத் தீ மூட்டி 900 பாகை வெப்பத்தில் இத்தாலியின் தனித்தன்மையுடன் தயாரிக்கப்படும் மகாராணி மகரிட்டா பீட்ஸா (queen margherita pizza) களுக்கு ரொறன்ரோ உட்பட உலகின் பல பகுதிகளில் இதே பெயரில் உணவகங்களும் உள்ளது.

எனினும் 1889ல் முதல் முதல் பீட்ஸா தயாரிக்கப்பட்டது இத்தாலியில் எனவும் கிரீஸில் எனவும் மாறுபட்ட கருத்தும் உண்டு. பீட்ஸா என்றால் நிரப்புவது என லத்தீனிலும், உரமூட்டுவது என கிரேக்கத்திலும் சொல்லப்பட்டாலும் முகத்தில் முறுவலைத் தருவது என்ற அர்த்தம் உள்ளதாகவே சுவைஞரால் கருதப்படுகின்றது.

ஆண்டு தோறும் பீட்ஸாவின் உலக விற்பனை 5 கோடனுகோடி (billion) ஆகும். 90 வீத அமெரிக்கரின் பெருவிருப்பத் தெரிவாக அமெரிக்காவில் மட்டும் 3 கோடனுகோடி பீட்ஸா விற்பனையாகின்றது.

200 இறாத்தல் (91கிலோகிராம்) பீட்ஸா தனி ஒருவரால் ஒரு கிழமைக்குள் தின்று தீர்க்கப்பட்டதும், 44457இறாத்தல் எடையுடன் கூடிய 123அடி விட்டமுள்ள பீட்ஸா உருவானதும், 155 விநாடிகளில் 14 பீட்ஸா தயாரிக்கப்பட்டதும், 2001 ம் ஆண்டு தென் ஆபிரிக்காவிலிருந்து ஒரு விளையாட்டுக் குழுவிற்காக அவுஸ்திரேலியாவிற்கு இரு நாட்களில் 6861 மைல் நெடுந்தூரம் தாண்டி விநியோகிக்கப்பட்டதும் இதுவரை உலக சாதனைகளாக பந்தி வைக்கின்றன.

ஆக, விலை கூடிய பீட்ஸா 12 அங்குல விட்டத்துடன் $1000 க்கு அமெரிக்காவில் விற்பனையாகின்றது. இதுதான் வேண்டும் என அடம் பிடிப்போர் இதற்காகச் சொல்லிவிட்டு 24 மணி நேரம் காத்திருக்க வேண்டும்.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பெப்பரோனியும் (pepperoni) இந்தியாவிலும் இலங்கையிலும் கோழிஇறைச்சி அல்லது ஆட்டிறைச்சியும், சீனாவில் நத்தையும் ஜப்பானில் சிப்பி அல்லது விலாங்கும் ரஷ்யாவில் முயலும் அவுஸ்திரேலியாவில் இறால் அல்லது அன்னாசியும் தென் ஆபிரிக்காவில் தேங்காய் துருவலும் பீட்ஸாவில் (toppings) அமோக அபிமானம் உள்ளவை.

தமிழர் தவிர்ந்த ஏனைய இனங்களிடம் தொலைக் காட்சியில் செய்திகள் முடிவடைந்த பின்னர் வானிலை அறிக்கை வாசிக்கும் பொழுதிற்தான் பீட்ஸா கடைகளுக்குத் தமது தேவையை கூறும் வழக்கம் பல காலமாக இருப்பதாக சொல்லப்படுவதுண்டு.

கொண்டாட்டங்கள், தாமதமாக வீட்டுக்குத் திரும்பல், அல்லது சமைக்கச் சோம்பல் என பெரியவர்களிடம் காரணம் வேறுபடினும் சிறாரிடம் பீட்ஸா உண்ணும் நாட்கள் எல்லாம் கொண்டாட்ட நாட்களே'

மூன்று வயதிலிருந்து பதின்ம வயதின் ஆரம்பம் வரை காலை மதியம் மாலை என மூன்று வேளைகளிலும் பீட்ஸாவை மட்டுமே உணவாக்கி உயிர் வாழ எத்தனிப்பவர்கள் உலகெங்கும் அதி-கரிக்கின்றனர்.

பீட்ஸா பிரியர்கள் ஆண்களை விட பெண்களதான் அநேகர். அதனால் வீடுகளுக்கு விநியோகம் மேற்கொள்ளும் சாரதிகளுக்கு கிடைக்கும் இனாம், பெண்களிடமிருந்து கூடுதலாகக் கிடைக்கும் என்பது வருத்தப்படாத வருவாய் தேடுவோரின் மனக்கணக்கு.

பீட்ஸா ஹட் (Pizza Hut) 90 நாடுகளில் 12583 உணவகங்களை கொண்டுள்ளது. கலாசார மாற்றத்தில் யாராவது ஒரு தமிழன் தலை வாழை இலையில் பீட்ஸா விருந்து வைக்காமலா இருக்கப்போகின்றான்?●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# இயந்திரம் விழுங்கிய இருப்பு

8

வெளிநாட்டு வாழ்வை வரம் என நினைத்துப் புறப்பட்டு வந்தோர் பலரும் அதனைச் சாபம் எனக்கருதிய கதைதான் தொடக்க காலத்தில் பெரும்பாலும் நிகழ்ந்தது. எதுவுமே சரிவரப் புரியாத, தாயகச் சூழலிலிருந்து பெரிதும் மாறுபட்ட தளத்திலிருந்து புதிதாகப் புறப்பட்ட தொடக்கங்கள்தான் இவை.

ஒவ்வொருவரும் தமது அறிவுக்கும் முயற்சிக்கும் ஏற்ப தம்வழிகளிற் போராடினர். 'கற்பாறைகளை ஊடுருவி இருப்புக்காகப் போராடும் வேர்கள்' ஆயினர்.

இருப்பை வலுப்படுத்துவதற்கு நம் குடியேறிகள் பெரிதும் பொருளாதாரத் தேவைகளோடுதான் போராடவேண்டியிருந்தது. அரச உதவிகள் தொடக்க காலத்தில் கைகொடுத்தாலும் தொடரும் தேவைகளுக்கு அவை போதியதாக இருக்கவில்லை. காணி, நகை ஈடுவைத்து வளர்ந்த வட்டிக்கும் குட்டிக்கும் வழி செய்யவேண்டியிருந்து. வாழ்வு வரும் என நம்பி வழியனுப்பி வைத்த அக்கா தங்கையரைக் கரை சேர்க்க வேண்டியிருந்தது.

பெரும்பாலானோர் வேலைகள் தேடினர். பலரும் அடிப்படைக்கூலி பெற்று அடிமாடுகளாயினர். முதலாளிகள் பெரும்பாலும் உலகெங்கும் 'ஓரேமாதிரியான' முதலாளிகளாகவே இருந்தனர். அட்டைக்குணம் அப்படியேயிருந்து.

ஒருவேலையில் தொடங்கி இருவேலை, மூவேலை என்றானது. நான்கு கட்டில்கள் கொண்ட ஓர் அறையில் எட்டுப்பேர் தங்கினர். வேலைநேரங்கள் ஒரு கட்டிலை இருவர் பயன்படுத்த வாய்ப்பாகவிருந்தன. சிலர் நாளில் சில மணிநேரமே தூங்கினர்.

வேகம்மிக்க வாழ்வின் சிறுசாயல்கள் கூடத் தாயகவாழ்வில் இருந்ததில்லை. ஆனால் இப்புலங்கள் இயந்திரங்களாகவிருந்தன. இவர்கள் உதிரிப்பாகங்களாக இயந்திரங்களோடு ஓட்டிக்கொண்டனர். இயந்திர ஓட்டமே இவர்களது ஓட்டமாகவிருந்தது.
ஓய்வற்ற இந்த இயந்திரவாழ்வைச் சுகனின் 'ஒரு கிறிஸ்தவனின் விண்ணப்பம்' என்ற கவிதை அழகாகப் பதிவுசெய்திருக்கின்றது.

"எங்கள் பரமபிதாவே
சீதனத்தில் பாதித்தொகை
ஏஜென்சிக்குப் போய்விட்டது
அரைவருடச் சம்பளத்தின் மிச்சம்
சீட்டுக்கழிவுக்குப் போய்விட்டது
ஒருமாதச் சம்பளம்
இயக்கத்திற்குப் போனபின்
எனக்கென்று ஆணிச்செருப்புகூட
வாங்கமுடியாமலிருப்பதேன்?
உயிர்த்தெழுந்த யேசுவே'
வேலைக்குப் போகும்போது
தூக்கத்தில்
அருகில் இருக்கும் பெண்ணின்மேற்சாய
அவள் சிரிக்க
பதிலுக்குக்கூடச் சிரிக்க முடியாது
வேலை என்னைத் துரத்துகின்றது.
எனது ஆண்டவரே'
விடியலுக்குச் சற்றுமுன் தூங்குகிறேன்
காலை எழுந்து ஓடுகின்றேன்
மிகச் சிறந்த மேய்ப்பரே'
உம்மிடம் இறைஞ்சிக்
கேட்கின்றேன்
எனது தேசத்தில்
என்ன நடக்கின்றது?
இந்த நற்செய்தியை மட்டும்
சொல்லியருளும்
ஆமென்"
(புலம்பெயர்தோர் கவிதைகள் - தொ.பு - திருநாவுக்கரசு)

இயந்திரச் சுழற்சியைத் தவிர, தம்மைச் சுற்றி எதுவும் நடப்பதை அறிய முடியாத அவலவாழ்வைச் சுமந்தனர் புலம்பெயர் முன்னோடிகள். இரண்டு, மூன்று வேலைகள் செய்தும் மீதப்படுத்த முடியாத வருவாயில் இவர்கள் வாழ்ந்துகொண்டிருக்க, தாயகத்து உறவுகள், தம்பிள்ளைகள் சொர்க்கபுரியில் இருப்பதாகக் கருதினர். தாயக உறவுகளோடு தொலைபேசியிற் பேசிப்பேசியே வருவாயிற் பாதியைத் தொலைத்தோரும் உண்டு. புலம்பெயர்ந்தோர் பலரும் உறவுகளுக்கு உண்மையை உரைத்ததில்லை. மாறாக அவர்கள் நினைப்பை மெய்யாக்க முயன்றனர். இருப்புகள் இயந்திரங்களாய் மாறிப்போக, மனிதம் இதய இயக்கங்களில் மட்டும் எஞ்சியிருந்தது.
தன்வாழ்வின் நிர்ப்பந்தத்தை இக்கவிதைகளில் வெளிப்படுத்துகின்றார் பாமினி.
"இயற்கை இழந்த
இயந்திரம் விழுங்கிய
தலைநகரில் எனது
நாட்களை இழக்க
நிர்ப்பந்திக்கப்பட்டேன்" -
(நினைவுத்தொடர்கள்)
குருதி சொட்டச்சொட்ட வழிநடந்த இத்தடங்களில் ரோஜாக்கள் பூத்துக்குலுங்க நீண்டகாலம் பிடித்தது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## விமர்சன உரையென்றால் பாராட்டாக இருக்க வேண்டும்!

கனடாவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவொன்றின் பின்னணியில் நடைபெற்ற சுவைச் சமாசாரம் இது! சம்பந்தப்பட்ட எழுத்தாளருக்கு இதுதான் கன்னிப் பிரசவம். இந்த விழாவுடன் எப்படியும் 'எழும்பி'விடவேண்டும் என்பது விருப்பம்.

பலருக்கும் அறிமுகமான ஒரு பிரமுகரை வெளியீட்டுரைக்கு ஏற்பாடாகி விட்டது. நூலின் பிரதியுடன், இரண்டு பக்கங்களில் அச்சடிக்கப்பட்ட தம்மைப் பற்றிய குறிப்புகளையும் (தம்பட்டம்) சேர்த்து அவரிடம் கையளித்தார்.

"நூலைப் படிக்க நேரமில்லாவிட்டால் பரவாயில்லை. இரண்டு பக்க கடதாசியில் உள்ளவைகளைத் தவறாமல் சொன்னால் சரி" என்பதே எழுத்தாளர் அந்தப் பிரமுகருக்கு வழங்கிய ஆலோசனை.

மறுத்தால் வெளியீட்டுரைச் சந்தர்ப்பம் கைமாறிவிடுமென்ற 'அச்சத்தில்' அப்படியே செய்தாராம் அந்தப் பிரமுகர். விழாவில் வெளியீட்டுரைக்குப் பதிலாக இடம்பெற்றது 'பாராட்டுரை'!

இதனை மற்றவர்களுக்குச் சொன்னவரும் அதே எழுத்தாளர்தான்!

## முத்தமிடுதல், உரத்துப் பேசுதல், சமைத்த உணவு....

பொது இடங்களில் முத்தமிடுவது, செல்லிடத் தொலைபேசியில் உரத்துப் பேசுவது, ஓடும் பேருந்தில் மணம் பரப்பும் சமைத்த உணவு வகைகளைக் கொண்டு செல்வது, வளர்ப்புப் பிராணிகளை பொது வாகனங்களில் கொண்டு செல்வது..... இவைகளுக்கு ஒட்டுமொத்தத் தடை!

இதனை மீறினால், முதலாவது தடவைக்குத் தண்டம் எழுபது டாலர். மீண்டும் மீண்டும் இவைகளைச் செய்தால், தண்டமும் அதிகரித்துச் செல்லும். சில சமயம் சிறையும் செல்ல நேரிடலாம். ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவிலேயே இவ்வகைச் சட்டங்கள். இங்கு ஓடும் வாகனங்களில் பாலியல் செயற்பாடுகள் அதிகரித்து வருவதே இதற்கு முக்கிய காரணமாம்.

*குறிப்பு: ரொறன்ரோவில் பொதுச் சேவை வாகனங்களின் ஆசனங்களில் கால்களைப் போடுவது, முதியவருக்கு அல்லது வலது குறைந்த ஒருவருக்கு ஆசனம் வழங்க மறுப்பது என்பவை தண்டனைக்குரிய குற்றமென்பது எத்தனை பேருக்குத் தெரியும்?*

## கலியாணம் எண்டிட்டால் அண்ணன் என்ன தம்பி என்ன?

தமிழக 'நாம் தமிழர்' இயக்க இணைப்பாளர் சீமானின் திருமணம் கடந்த மாதம் அவரது ஊரில் வெகுசிறப்பாக நடைபெற்றது. தமிழக முன்னாள் சபாநாயகர் காளிமுத்துவின் மகளே சீமானின் மணப்பெண். இது காதல் திருமணமாம்!

இந்தத் திருமணம் பற்றி கடந்த மாதம் தமிழக ஊடகங்களில் வெளியான விமர்சனங்களில் முக்கியமானது சீமானின் 'கொள்கை' சம்பந்தமானது.

"ஈழத் தமிழ்ப் பெண்ணொருவரையே மணம் புரிவேன் என்றும், ஈழமண்ணின் விதவை ஒருவருக்கு வாழ்வளிப்பேன் என்றும் முன்னர் இவர் சொன்னது என்னாயிற்று" என்றே பலரும் சுட்டிக் காட்டியிருந்தனர்.

"சொன்னதெல்லாம் 'சீ' ஆயிற்று; கலியாணம் எண்டு வந்தால் அண்ணன் என்னடா? தம்பி என்னடா" என்று ஒருவர் சினத்தில் வரைந்துள்ளார்.

குறிப்பு: *சீமானின் நண்பரான மறைந்த நடிகர் மணிவண்ணனின் மைந்தன், ஈழப்பெண் ஒருவரைக் கடந்த மாதம் திருமணம் புரிந்தது, சொல்லாமற்செய்தது.*

## தில்லுமுல்லு கட்சியும் அதிக தில்லுமுல்லு கட்சியும்!

கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டுக்கு 232 கோடிக்கும் அதிகமான நிதி செலவிடப்பட்டது. இதில் பெருமளவு பணம் கையாடப்பட்டுள்ளதாக ஒரு வழக்கு தாக்கலாகியுள்ளது.

கருணாநிதியின் மகன் ஸ்டாலின் சென்னை மாநகர முதல்வராகவிருந்த வேளையில் மாநகர சபையில் 417 கோடி ரூபா சூறையாடப்பட்டுள்ளதாகத் தற்போதைய முதல்வர் சைதா துரைசாமி சாடியுள்ளார்.

கருணாநிதி ஆட்சிக் காலத்தில் மத்திய அமைச்சராகவிருந்த அவரது கையாள், மத்திய மந்திரி ராசா மீது மோசடி வழக்கு தாக்கலாகவுள்ளது. இவைகளை மனதில் வைத்து, தூத்துக்குடியில் நடைபெற்ற தே.தி.மு.க பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய விஜயகாந்தின் மனைவி பிரேமலதா திமுக என்றால் **தி**ல்லு **மு**ல்லு **க**ட்சி என்று கூற, கணவர் விஜயகாந்த் அதிமுக என்றால் **அ**திக **தி**ல்லு **மு**ல்லு **க**ட்சி என்று சொன்னார்.

*குறிப்பு: ஜுனியர் விகடனில் ஒரு வாசகர் தே. தி. மு. க என்றால் '**தே**டி **மு**னைந்து **தி**ருடும் **க**ட்சி' என விளாசியுள்ளார்.*

## களவுக் கள் மீதான ஆசையால் மேலாடைகளை இழந்தனர்

இரவு நேரங்களில் அடுத்த வீட்டாரின் தென்னைகளில் ஏறி களவாகக் கள் குடிக்கும் பிரியர்கள் இருவர்.

இலகுவாக மரமேறுவதற்காக மேலாடைகளைக் களைந்து வைப்பது இவர்களின் வழக்கம். இதனை அவதானித்து வந்த வளவுக்காரர் ஒருநாள் அவர்கள் மரமேறியபின், மேலாடைகளை எடுத்துச் சென்று விட்டார். மரமேறிக் கள் குடித்துவிட்டு இறங்கியவர்கள் வேறு வழியின்றி உள்ளாடைகளுடன் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப நேர்ந்தது.

"உங்கள் மேலாடைகளை வந்து எடுத்துச் செல்லுங்கள்" என்று வளவுக்காரர் தகவல் அனுப்பியும் அவர்கள் செல்லவில்லை. தென்னிலங்கையில் பெந்தர கங்கை என்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. (ஆதாரம்: இலங்கை தமிழ் மிறர்-17/9/13)

## ஹலிஃபக்ஸ் மேயராக விரும்பிய 'டக்ஸடோ ஸ்ரான்' மரணம்

நொவஸ்கொஷியாவின் தலைநகரான ஹலிஃபக்ஸ் நகராட்சித் தேர்தலில் 2012ல் மேயர் பதவிக்குப் போட்டியிட்டு பிரபல்யமானவர் டக்ஸடோ ஸ்ரான். பல தொலைக்காட்சி நிலையங்களும் இதற்காக அப்போது விசேட நிகழ்ச்சிகளை ஒளிபரப்பின.

இதற்கான காரணம், ஸ்ரான் கறுப்பு வெள்ளை நிறமான கனடியப் பூனை. இதன் உரிமையாளர்களான ஹியு மற்றும் கதி ஆகியோர் இனைத் தேர்தல் களத்தில் இறக்கி சாதனை புரிந்தனர்.

இந்தப் பூனை கடந்த மாதம் இறந்த போது முன்னரிலும் அதிமுக்கிய இடத்தை ஊடகங்கள் வழங்கிப் பிரசித்தமாக்கின.

**உதாசனன் உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'குறமகள்' வள்ளிநாயகி இராமலிங்கம்

# கூடிக் குலாவும் பந்திப் பரிமாற்றம்

நம் நாட்டில் சாதிப் பாகுபாடு ஒரு காலத்தில் கடுமையாக இருந்ததுதான். அதைவிட ஒரு சாதிக்குள்ளேயே பல உட்பிரிவுகள் இருந்தன. அவை பகுதிகள் என்றழைக்கப்பட்டன. பிரதானமாக உணவுப் பழக்கத்தில் அது மோசமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இனசனங்களாயிருந்தாலும்கூட பந்திப்போசனத்தில் கடும்பிடி இருப்பது வழக்கம்.

"அவன் சொந்த மச்சான்தான். ஆனால் தன் மகளுக்கு உத்தியோககாரனென்று அங்கே மாப்பிள்ளை எடுத்தவன்! அந்த கல்பிட்டியான்கள் வந்து இருக்கிற பந்தியில எனக்கென்ன வேலை" இப்படி அந்தப் பகுதி இந்தப் பகுதி என்று கூறி அவர்களது உணவுப் பழக்கம் சிறுகுடும்பங்களுக்குள்ளேயே அமைந்துவிடும்.

வெளிநாடுகளுக்கு வந்தபின் பகுதிகள் மறைந்துவிட்டன. வந்த இடத்தில் தமிழர் நாம் ஒன்றாக வாழ்தலின் அவசியம் புரிந்துவிட்டது. ஏதோ ஒரு ஊரில் பிறந்தவர்களுக்கு வேறோர் ஊரில் வாழ்ந்தவரே அயலட்டையில் அல்லது அண்மையில் வாழ்பவராக நேர்ந்தது. அதனால் சமூகப் பிராணியான மனிதனுக்கு பரந்த மனப்பான்மை அவசியம் தேவைப்பட்டது.

இப்படி ஒரு கலப்பும் புகுமுக நாட்டின் உணவுப் பழக்கமும் வந்தேறு குடிகளுக்கு வாலாயமாயின. அங்கே தாவர உணவினர் மாமிச உணவினர் என்ற பெரும் பிரிவுகள் இருந்தன. தாவர உணவினர் மரக்கறி உண்போராகவும் மாமிச உணவினர் இறைச்சி மீன் முட்டை உண்போராகவும் இருந்தனர். கிறிஸ்தவர்கள் சிலர் மட்டும் மாட்டிறைச்சி உண்பர். பெரும்பாலான தமிழர் ஆடு, கோழி, மீன், முட்டை என்பவற்றையும், மூலவியாதிக்கு நல்லதென சிலர் ஆமை இறைச்சியும் உண்பர். வெகுசிலர் உடும்பு, புறா, மான், மரை, பன்றி உண்பர். இதன்மேல் எதையும் நாம் அறிந்ததில்லை. ஏனெனில் பகுதிகள் எனும் பெயரால் பந்தி போசனத்தின் எல்லை வகுக்கப்பட்டிருந்தது. வெளிநாடுகளுக்கு வந்தபோது, சாதி, சமயம், பகுதி என்பன தீவிரமாகச் செயற்பட முடியாத நிலையில் தமிழர் என்ற பொதுச் சொல்லால் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்தனர். இயலாமை பரந்த மனப்பான்மையைத் தோற்றுவித்திருக்கலாம்.

காலம் செல்லச் செல்ல மக்கள் அள்ளுண்டு குடியேறியபோது ஊர் பெயர்கள் கல்லூரிப் பெயர்களால் சிறிது ஆக்கபூர்வமான பாகுபாடு ஏற்படத் தொடங்கியது. உணவுப் பழக்கம் பற்றி மட்டும் பார்த்தால் பருத்தித்துறை வடை, மயிலிட்டி விளைமீன், ஆனைக்கோட்டை நல்லெண்ணை போன்றன தமிழ்க் கனடியர்களிடம் செல்வாக்குப் பெற்றது. ஏதோ ஒவ்வொரு காரணங்களுக்காக அடிக்கடி உறவி-னர் நண்பர்கள் கூடி உண்டுகளித்து மகிழ்வர். இதனைச் சிலர் விருந்துபசாரம் என்பர். அல்ல, அல்ல வருந்தி வருபவர்க்கோ வழிப்போக்கர்களுக்கோ தேவையை அறிந்து உணவு கொடுத்தல் விருந்தெனலாம்.

வசதியாக வாழும் இந்நாட்டிலே இது ஒரு களியாட்டமாகும். கூடியிருந்து பேசிக் களித்து தத்தம் விருப்புக்குரிய உணவுகளைத் தேர்ந்தெடுத்து உட்கொள்ளுதல் பந்திப் பரிமாற்றம்.

எமது தங்கை வீட்டிலொரு பிறந்தநாள் சந்திப்பு நேரம். ஊரின் பகுதிகளைப் பேணிய வண்ணமே இங்கேயும் வாழும் எமக்கு, அவளின் கணவர் பகுதி, பல கிளைப் பகுதிகளைக் கொண்டது. அதனால் உணவுப் பழக்கங்கள் பல்வேறுபட்டவை. சமைக்கப்போகும் எனக்குத்தான் வேலை அதிகம்.

தாவர உணவு பற்றி பெரிதாக ஒன்றும் இல்லை. எண்ணெய் கூடாது என்பவர்களுக்காக நிறைய மரக்கறிகளை வைத்து அரைவாசிக்கு தாளித்துப் போடுவது, கத்தரிக்காய் நல்லெண்ணைப் பொரியல், அப்பளம், வாழைக்காய், மோர் மிளகாய், வடகம் எனப் பொரியல்கள். எல்லாருமே மரக்கறி எடுப்பர்.

அதனால் மரக்கறிகள் கூட வைக்க வேண்டும். கீரை வகைகள் - சம்பலாக்கல் - அரைக்கப்படல் - மசிக்கப்படல் - மரக்கறிகள் - பாற்கறியாக உறைப்புக் கறியாக தாளிதம் போட்டும் எண்ணெய் சேர்க்காமல் இருப்பதற்கு தாளிதம் போடாமல், சில வறைகளாக தேங்காய்ப்பூ போட்டு செய்தல், போடாமல் செய்தல்.

மரக்கறி அல்லாத மேசைக்கு சில மரக்கறிகளுக்கு இறால், கருவாடு போட்டு வைத்தல்.

கடலுணவு உண்போருக்கு மீன், கணவாய், நண்டு, இறால், கருவாடு போன்றன. இவையும் பொரியலாக- கூட்டுக் கறியாக, குழம்பாக, சொதியாக, பிரட்டலாக உருமாறும்.

சிலர் கடலுணவை எடுக்க மாட்டார்கள். சிலர் கடலுணவை மட்டுமே உண்பர். யேசுநாதர் சொன்னாரென கடலுணவுக்கு முக்கியத்துவம் கொடுப்பர்.

பொதுவாகவே மிருகங்களின் இறைச்சியை உண்போர் அதிகமாகவே உளர் (ஆடு, மாடு, மான், மரை, பன்றி என்பன முதலிடம் வகுப்பன) இதில் பெரும்பாலான சைவர்கள் மாட்டிறைச்சி உண்பதில்லை. Vegan எனப்படுவோர் மாடு சம்பந்தமான எதையும் உண்பதில்லை. அதாவது இறைச்சி மாத்திரமல்ல பால் தயிர் மோர் வெண்ணெய் நெய் என்பனவும் எடுக்க மாட்டார்கள்.

எந்த ஒரு பறவையின் இறைச்சியையும் உண்ணாத பலர் இருக்கிறார்கள். கோழி, புறா போன்றன. காரணம் தெரியாது. சிலசமயம் முட்டையும் இதனுள் அடங்கும்.

இறைச்சி வகையுள் சிலருக்கு உருளைக்கிழங்கு சேர்க்க வேண்டும். சிலர், உருளைக்கிழங்கு மூலப்பொருள் - இறைச்சியின் சுவையை கிழங்கும் உறிஞ்சி விடுவதால், இறைச்சியின் நேரடி சுவையை அனுபவிக்க முடியாது என்பர்.

இறால், வெங்காயம் சேர்த்த பொரியல், இறால் கூட்டுப் பிரட்டல், இறால் சொதி என வகைப்படுத்த விரும்புவர். எனவே ஒரு பொருளையே பொரியல், பால் கறி, உறைப்புக் கூட்டு என வைத்தல் வேண்டும்.

ஆட்டெலும்பு ரசத்துக்கும் தனி மவுசு. சைவருக்கு மிளகு, உள்ளி, சீரகம் குத்திய சொதி தேவை.

பிரதான உணவாக பிரியாணி, நூடில்ஸ், புட்டு, இடியப்பம், வதக்கிய சோறு, தோசை, இட்லி என்பன. சிலருக்கு ஆதிகாலவாசிகளை நினைவூட்டுவதுபோல பாபிகியூ யந்திரத்தில் சுட்ட உணவும் சலாட் என நறுக்கிய இலை குழைகளும் அவற்றுக்கான சலாதுகளும் விருப்புக்குரிய உணவாகும்.

குடிவகையுடன் கொக்கோகோலாவும் உணவோடு உட்செல்லும். ஈற்றில் கேக், பழக்கூழ், குளிர்களி, தொதல், அல்வா போன்றவை எல்லாம் முடிந்து ஆட்டபாட்டமும் முடிந்து ஈற்றில் பால் கலவாத கடுங்கோப்பி சிறுகோப்பைகளில் வரும்.

இவைதான் இன்றைய பந்திப் பரிமாற்றங்கள். மேலே (31 ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. சம்பந்தன்

# மறு பிறப்புக்கு மற்றுமொரு சாட்சி!



அது அடர்ந்த காடு' விலங்குகளின் வாழ்வியலைப் பதிவு செய்ய அவர்கள் மறைந்து இருக்கின்றார்கள்' தற்செயலாக ஒரு சம்பவம் நிகழ்கின்றது. ஒரு குரங்கு ஓடி வருகின்றது நிலத்தில். அதனை வேட்டையாட சிறுத்தை ஒன்று துரத்தி வருகின்றது. வேட்டைத் திறன் மிக்க சிறுத்தையிடம் குரங்கு அகப்பட்டு விடுகின்றது. குரங்கை நிலத்தில் வீழ்த்தி அதன் குரல்வளையைக் கடித்துக் கொன்ற சிறுத்தை அந்தக் குரங்கின் உடலை எடுத்துக் கொண்டு ஒரு மரத்தில் ஏறி பிற விலங்குகளின் இடையூறு இன்றி அந்த இரையை உண்ண ஆயத்தம் ஆகின்றது.

அப்போது தான் சிறுத்தை பார்க்கின்றது. குரங்கு அம்மாவின் வயிற்றைக் கட்டிப் பிடித்துக்கொண்டு பிறந்து ஒரு நாளான குழந்தைக் குரங்கு இருக்கின்றது' அதற்கு சிறுத்தையின் கொடுமை தெரியவில்லை' அம்மாவின் மரணம் தெரியவில்லை' குட்டியைக் கண்ட சிறுத்தை ஒருகணம் திகைக்கின்றது' இறந்து போன தாயைப் பரிவோடு பார்க்கின்றது. குழந்தையைப் பார்க்கின்றது. தப்புச் செய்து விட்டோம் என்ற கவலை அதனை வாட்டுகின்றது. குற்ற உணர்ச்சியோடு குழந்தையைப் பார்க்கின்றது. அம்மாவை உண்ண அதற்கு மனம் வரலில்லை. வேட்டையாடும் போது அதன் கண்ணில் இருந்த கொடூரம் இப்போது இல்லை. அதன் கண்கள் கலங்கிப் போய் இருக்கின்றன. குட்டியைப் பிடிக்க வரும் ஏனைய விலங்குகளைச் சிறுத்தை விரட்டுகின்து. தனது பிள்ளையைப் போல மெதுவாகக் கவ்வி எடுத்து மரத்தில் பாதுகாப்பான இடத்தில் விடுகின்றது. நாவால் நக்குகின்றது. மார்போடு அணைத்துக் கொள்கின்றது.

அப்போதும் அதன் துயரம் தீரவில்லை. தப்புச் செய்து விட்டேன். ஒரு அம்மாவுக்கும் குழந்தைக்கும் பெரும் கொடுமை செய்துவிட்டேன் என்ற வேதனை அதன் மனதை விட்டு சிறிதும் அகலவில்லை' தருமம் தவறி விட்டேன், இரக்கம் இல்லாமல் நடந்துவிட்டேன் என்ற எண்ணத்தில் பித்துப் பிடித்தது போலச் சோர்ந்து படுத்து விடுகின்றது அந்தச் சிறுத்தை' அப்போது கூட அந்தக் குட்டி மரத்தில் இருந்து விழுந்து விடாமல் அதன் வாலை தன் முன் கால்களால் பிடித்துக் கொள்கின்றது - ஒரு தாயின் பரிவோடு'

இந்தக் காட்சியை அவர்கள் படமாக்கி இருக்கிறார்கள்' LEOPARD KILLS MONKEY AND DISCOVERS BABY என்ற தலைப்பில் வெளியிட்டும் இருக்கிறார்கள் இணையத்தில்'

இங்கே ஒரு விலங்கு தருமம் தவறி விட்டோம் என்று சிந்திக்கின்றது' தன் குற்றத்துக்கு பிராயச்சித்தம் தேடித் தவிக்கின்றது' நீதி தவறிய செயலால் கிடைத்த ஆகாரத்தை உண்ண அது விரும்பவில்லை' இந்த மூன்று செயலும் ஆறு அறிவு படைத்த மனித வர்க்கத்துக்கு உரியவை. இலங்கை போன்ற நாடுகளில் மனித வர்க்கமே கடைப்பிடிக்கத் தவறிய ஒழுக்க நெறிகள் இவை' ஒரு விலங்கு இதை பின்பற்றியது எப்படி?

இங்கேதான் விஞ்ஞானத்தை மதங்கள் வென்று விடுகின்றன. எல்லா மதங்களிலும் இந்த ஒழுக்க நெறி-களைப் போதிக்கும் நூல்கள் இருக்கின்றன. ஆனால் விலங்கு படிக்க வாய்ப்பு இல்லை' எனினும் இந்த நூல்களின் சாராம்சப்படி விலங்கு ஒன்று நடந்து கொள்கின்றது என்றால் இந்த மெய்யறிவு எப்படி அதற்கு வந்தது?

இதற்கு விடையாக சில மதங்கள் முற்பிறப்பைச் சொல்கின்றன. இப்போது விலங்காகப் பிறந்து உணவுக்காக குரங்கைக் கொல்லும் ஆத்மா முந்தைய ஜென்மங்களில் வேதங்களையோ குரானையோ பைபிளையோ படித்து நீதி நெறிகளை உணர்ந்து இருக்கின்றது. தரும நெறிகளைக் கைக்கொண்டு வாழ்ந்திருக்கின்றது' அந்த உணர்வின் தாக்கம் இன்று சிறுத்தையாகப் பிறந்தாலும் நல்லது கெட்டதுகளை அதற்கு அறிவிக்கின்றது. அதற்கேற்ப அது நடந்து கொள்கின்றது'

இதைத்தான் திருவள்ளுவர் ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுபிறப்பும் ஏமாப்பு உடைத்து என்றார்' ஒரு பிறப்பிலே பயிலும் கல்வி தொடர்ந்து வரும் பிறவிகளிலும் உதவும் தன்மை வாய்ந்தது என்பது அவர் கருத்து'

இந்து மதத்தில் சிவராத்திரி சம்பந்தமாக ஒருகதை பேசப்படும்' ஒரு சிவராத்திரி நாளில் இரவு நேரம் குரங்கு ஒன்றை புலி கலைத்துச் சென்றபோது அந்தக் குரங்கு ஒரு வில்வ மரத்தில் ஏறி இருந்து விடுகின்றது. புலி எப்போது குரங்கு இறங்கும் என்று கீழே காத்திருக்கின்றது. குரங்குக்குத் தூக்கம் வருகின்றது. தூக்கத்தில் கீழே விழுந்து விடாது இருக்க வில்வ மர இலைகளைக் குரங்கு பறித்து கீழே போடுகின்றது. அந்த இலைகள் வில்வ மரத்தின் கீழே இருந்த ஒரு சிவலிங்கத்தின் மீது விழுகின்றன.

காலையிலே இறைவன் காட்சி கொடுத்து தெரிந்தோ தெரியாமலோ நீ சிவராத்திரியில் வில்வம் இலைகளை என்மீது போட்டதால் அடுத்த பிறப்பிலே பெரும் சக்கரவர்த்தியாகப் பிறந்து நாடாளக் கடவாய் என்று வரம் கொடுத்தான். உடனே மெய்யறிவு பெற்ற குரங்கு இறைவா நான் சக்கரவர்த்தியாகப் பிறந்தாலும் உன்னைத் தரிசித்த இந்தப் பிறப்பை மறக்காமல் இருக்க குரங்கு முகத்தொடு பிறக்க வரம் தா என்று கேட்டது'

இறைவனும் அப்படி வரம் கொடுக்க அடுத்த பிறப்பிலே அந்தக் குரங்கு முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற பெயரோடு பிறந்து நாட்டை ஆண்டது என்றும் கண்ணாடியிலே தன் குரங்கு முகத்தைப் பார்த்து முற்பிறவியையும் வில்வமரத்தையும் எண்ணி இறைவனை வழிபட்டது என்றும் திருவிளையாடல் புராணம் சொல்லும்' முசுகு என்றால் குரங்கு' அதனால் முசுகுந்தன் எனப் பெயர் பெற்றது மறுபிறவியில் குரங்கு. புராணம் என்று ஒதுக்கிவிட்ட இந்தக் கதை சிறுத்தையின் செயலைக் கண்கூடாகக் கண்ட பின்பு தூசு தட்டிப் படிக்க வேண்டிய ஒன்றாகி விடுகின்றது'

இப்பொழுது கூட நாம் கட்டிலில் படுத்திருக்கும் போது திடீரென்று உயரத்தில் இருந்து விழுவது போலக் கனவு கண்டு திகைக்கின்றோம்' இதைக் கூட பழைய பிறவிகளில் மரங்களில் இருந்து தவறி வீழ்ந்த சம்பவங்களின் தொடர்பு என்கிறார்கள் மருத்துவர்கள்'

இது போல தன் கன்று தேர்ச்சில்லிலே அடிபட்டு இறந்த போது

(24ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 7

மாகாணசபைத் தேர்தல் கடந்த மாதம் அங்கு நடந்து முடிந்தது...! அது குறித்த தகவல் பரிமாற்றத்தில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிக்குச் சவால் விடும் அளவுக்கு தமிழ் முகப்புத்தக உலகும் மாறியிருந்தது. அங்கு போட்டியிட்ட பலரும் முகப்புத்தகத்தையும் தங்களுக்கான பிரச்சாரக் கருவியாக பயன்படுத்தியது இன்னுமொரு புதிய மாற்றம்! போட்டியிட்ட பெண் வேட்பாளர் மீதான தாக்குதல், திருட்டுத்தனமாக போலிப்பத்திரிகை ஒன்று அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டமை, அரச புலனாய்வாளரை தமிழ் எம்பி ஒருவர் மடக்கிப் பிடித்தது, தேர்தல் கருத்துக் கணிப்புக்கள், தேர்தல் முடிவுகள் உட்பட பல தேர்தல் களேபரங்கள், கோலாகலங்கள் அனைத்தும் முகப்புத்தகத்தூடாக உடனுக்குடன் வெளிபரப்பப்பட்டன. முகப்புத்தக அரசியல் விமர்சனங்கள், கருத்தோட்டங்களெல்லாம் தூள் கிளப்பிற்று என்றும் சொல்லலாம். தேர்தல் முடிவு கிடைத்ததும் பலரும் தீபாவளி வந்ததுபோல மகிழ்ச்சிக் கருத்துக்களையிட்டு மகிழ்ந்தனர். நோர்வேயில் இருக்கும் ஒரு கவிஞர் தன் முகப்புத்தகத்தில் கீழ்க்கண்டவாறு அதைக் கவிதையாக்கி மகிழ்ந்து கொண்டார்: "மகிழ்ச்சி... மகிழ்ச்சி... எங்கள் பட்ட நம்பிக்கைகள் பசுமையாய் துளிர்க்கிறதில்... நாம் நட்ட வீரரின் நடுகல் சிதைவுகள் முன் - அஞ்சலியாய் மீண்டும் அஞ்சாது நிமிர்கிறதில்.." அதை வழிமொழிவதுபோல வந்த வேறொருவரின் முகப்புத்தகப் பதிவு இது: "சிதைக்கப்பட்டது சமாதிகளே.. சரித்திரங்களில்லை".

உண்மையில் தேர்தல் பிரச்சாரம் ஆரம்பமான நாள் முதலே கூட்டமைப்பை ஆதரிப்பதும், எதிர்ப்பதுமாக கருத்துப் பரிமாற்றங்கள் அனல் பறந்தன. முதலமைச்சர் தெரிவு குறித்தும், போட்டியிடும் கட்சிகளின் பின்னணி, வேட்பாளர்களின் தகைமைகள் பற்றியும் பலவிதக் கருத்துக்கள் விவாதங்களாக உலகளாவிய வீச்சுடன் அலசப்பட்டன. கருத்துக்கள் பலதரப்பட்டதாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் அடிநாதமாக இருந்தது தமிழ் ஈழம் என்ற பிரிவினைவாதம் குறித்த விவாதம்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லையல்லவா.

பல விவாதங்கள். அதில் ஒன்று: கூட்டமைப்பின் முதலமைச்சராக வரவேண்டியவர் இந்திய ஆங்கிலப் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டி! பலரும் அவசர அவசரமாக அந்தப் பத்திரிகைச் செய்தியை மட்டுமே சத்தியக் கடுதாசியாக எடுத்துப் பதிவுகளை இட்டபோது விவாதம் பற்றிக் கொண்டது. பேட்டியின்போது தான் தெரிவித்ததை 'அந்தப் பத்திரிகை திரித்து எழுதிவிட்டது' எனப் பேட்டியளித்தவரே சொன்ன மறுப்பைக் கணக்கெடுக்காமல் முகப்புத்தகத்தில் போடப்பட்ட பல பதிவுகளுக்கு எதிர்வினையாற்றுவது எனக்கும் சுவாரஸ்யமாக அமைந்தது. அப்படி ஒருவரது விவாதப் பதிவுகளின்போது நான் இட்ட கருத்து இது: "மூன்று வகையான தமிழீழ அரசியல்கள் இன்று உள்ளன. மூன்றும் வெவ்வேறு வகையானவை.

(1)'ஈழத்து-தமிழீழ' அரசியல் (2)'புலம் பெயர்-தமிழீழ' அரசியல் (3)'தமிழக-தமிழீழ' அரசியல். ஏனோ இவை மூன்றும் ஒரு நேர்கோட்டில் பயணிப்பதாகத் தெரியவில்லை."

ஆனால் இவை மூன்றும் ஒரு நேர்கோட்டில் பயணம் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை தருவது போல இருக்கிறது தேர்தலுக்குப் பிந்திய ஈழத்து, புலம் பெயர், தமிழக முகப்புத்தகப் பதிவுகள்.

அது ஒருபுறம் இருக்க சென்ற மாதம் முகப்புத்தகத்தில் தமிழர்களிடையே பிரபலமாக இருந்த இன்னொரு விடயம் நவநீதம்பிள்ளையின் இலங்கைக்கான பயணமாகும். நவநீதம்பிள்ளையின் வரவும் அதையொட்டி அங்கு நடந்தவையும் உண்மையில் ஒரு தனி அத்தியாயம்.

தமிழர் உரிமைப் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட அந்தப் பாவப்பட்ட எழை எளிய மக்கள் நவநீதம்பிள்ளைக்கு தந்த உணர்வுபூர்வமான வரவேற்பானது முகப்புத்தகத்திலேயே கண்ணீரைக் காண வைத்துவிட்டது. சோகம் ததும்பிய முகங்களோடு நவநீதம்பிள்ளையைக் காண வந்ததிருந்த எங்கட சனத்தின்ரை படங்கள் முகப்புத்தகத்தையே ஒரு சுடுகாடு போல ஆக்கியிருந்தது. மேலும், எந்தவிதமான பந்தாவும் இல்லாமல், பாதிக்கப்பட்ட மக்களோடு இயைந்திருந்து, அவர்கள் பேசுவதை நவநீதம்பிள்ளை கேட்டுக் கொண்டிருந்த படங்களும் வீடியோக்களும் நெகிழ வைத்தன. தன்னை நாடி வந்தவர்களை அணைத்து "ஒரு தாய் போல பேசினார்" என்றும், புகார் செய்யப் பயந்திருந்தவர்களை பயப்படாமல் வந்து தன் "காதுக்குள் சொல்லுங்கள்" என்றெல்லாம் அவர் நம்பிக்கை ஊட்டினார் என்றும் முகப்புத்தகப் பதிவுகள் வந்திருந்தன. எந்தப் பதிவிலும் அவரது நேர்மைத்தன்மை குறித்து விவாதங்கள் இருக்கவில்லை. (அவர் அணித்திருந்த எளிமையான ஆடைகளே அவரது நேர்மைத்தன்மை குறித்த நம்பகத்தன்மையை பலருக்கும் உருவாக்கியிருக்குமோ) வாராதுபோல வந்த ஒருவரிடம் இத்தனை நம்பிக்கையா...?

ஆக.. ஓய்ந்து கிடந்த பின்னர் வாராதுபோல வந்த தேர்தல் முடிந்துவிட்டது. "தமிழ் மக்களைக் காக்க நாமிருக்கிறோம்" என்ற அரசியல்வாதிக-ளின் பிரச்சாரங்கள் முடிந்து விட்டன. மக்களின் அங்கீகாரத்துடன் புதிய தமிழ்த் தலைவர்கள் உருவாகிவிட்டார்கள். ஆனால்.... ஒருவகையில் நினைத்துப்பார்த்தால்.... "இத்தனை அரசியல்வாதிகள், தமிழ்த்தலைவர்கள் ஏற்கனவே அங்கு இருந்திருந்தும், தமக்கு 'நீதி வேண்டும்' என ஒரு அந்நிய தேசப் பெண்ணிடம் முறையிட நம் அபலை மக்கள் ஏன் போனார்கள்?" என்ற கேள்விதான் இப்போது என் மனதில் எழுந்திருக்கிறது. அந்தக் கேள்வி இன்னும் பல கேள்விகளைத் தொடர்ந்து எழுப்பிக் கொண்டும் இருக்கிறது. எப்போதோ முகப்புத்தகத்தில் கண்ட கவிதை ஒன்று கீழே:

*"அதிக வலி எடுக்கும்போது*
*அம்மா என்று கத்திவிடுகிறது*
*அனாதைக் குழந்தை"*●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# குடியுரிமை பெற்ற 4 எல்லோரும் கனடியரா?

கனடிய குடியுரிமை மட்டுமே எம்மைக் கனடியர்கள் ஆக்கிவிடாது, கனடிய நாட்டின் பண்பும் நாகரிகமும் பண்பாடும் எம்மிலும் வரும்வரை நாம் கனடியர்கள் ஆகிவிட முடியாது என்பதை, குறிப்பாக நேரக் கட்டுப்பாட்டைத் தவற விடுகின்ற பழக்கத்தை, தமிழினத்திற்கான ஒரு பொதுவான குணாதிசயமாக வெளிநாட்டவர்கள் பேசும் அளவிற்கு வைத்துவிடாதிருப்பது முக்கியம் என்பதை, கடந்தவார இதழிலும் விவாதித்தோம்.

இந்த வாரம், நேரக்கட்டுப்பாட்டை சீர்செய்து கொள்வதற்கான வழிமுறைகள் பற்றிப் பார்க்கலாம்.

நேரத்தைக் கடைப்பிடிக்கத் தவறுவது என்பது, தமிழர்கள் மத்தியில் காணப்படும் ஒருவித பரம்பரை மனநோய் என்று சொல்லுமளவிற்கு, பெரும் விகிதாசாரத்தில், தமிழ் மக்கள் நேரக்கட்டுப்பாட்டை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்து வருவது வருந்தத்தக்கது.

ஐரோப்பிய நாடுகளில், கடும் நேரக்கட்டுப்பாட்டை அந்தந்த நாட்டு நிர்வாகங்கள் அவசிய கட்டுப்பாடாக வைத்திருப்பதனால், ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள், நேரக் கட்டுப்பாட்டை நன்றாகப் பழகி வைத்திருக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளிலிருந்து கனடாவுக்கு வருகின்ற எமது தமிழ் உறவுகள்கூட, கனடியத் தமிழர்களிடம் பரவலாகக் காணப்படும் நேரக்கட்டுப்பாடற்ற கேவலமான பழக்கத்தை விமர்சித்து எள்ளிநகையாடும் அளவுக்கு, கனடியத் தமிழர்கள் மிக மோசமாக, நேரக்கட்டுப்பாட்டைத் தவற விடுகிறார்கள்.

நேரக் கட்டுப்பாட்டைக் கவனத்தில் எடுக்க கீழ்வரும் விடயங்களை முக்கியமாகக் கருத்தில் எடுத்து, பழக்கத்தில் கொண்டுவருவது முக்கியம் என்கிறார்கள் துறைசார் நிபுணர்கள்:

* நேரக்கட்டுப்பாட்டைத் தவற விடுகின்ற பழக்கம் எனக்கு இருக்கிறது என்பதை முதலில் நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் நேரக் கட்டுப்பாட்டைத் தவற விடுவது ஒரு தீய பழக்கம் என்பதையும் நான் ஏற்றுக் கொள்வது அவசியம்.
* தினக் குறிப்பேடு வைத்திருப்பதோடு, சரியான நேரங்களைக் குறித்து வைப்பது அவசியம்.
* யாராவது அழைப்பு விடுக்கும்போது, நாம் எத்தனை மணிக்கு சமூகம் தரவேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள் என்று பகிரங்கமாகவே கேட்டு, அவர்கள் கூறும் நேரத்தைக் குறித்து வைத்திருப்பது.
* அப்படி நாம் குறித்து வைத்துக்கொண்ட நேரத்திற்கு ஆஜராகும் வகையில், எமது பயணத்தை ஆரம்பிப்பது.
* எப்போதும் 15 நிமிடங்கள் முன்னதாகவே சென்று சேரும் வகையில் நேரக் கணிப்பை உறுதி செய்வது.
* குறித்த நேரத்தில் ஆஜராவதற்கு ஏதுவாக, குளிப்பது, உடை மாற்றுவது, பயணம் செய்வது போன்றவற்றையும் நேர அட்டவணையில் தெளிவாகக் கணிப்பிட்டு, அதற்கேற்ப ஆயத்தமாகுவது.
* நேரத்திற்கு எழுந்திருப்பதும் அவசியம். இன்னும் கொஞ்ச நேரம் தூங்கலாமே என்று நினைத்து விட்டால், அத்தனை திட்டங்களும் பிழைத்து விடும் என்பதை உணர வேண்டும்.
* மற்றவர்கள் நேரத்திற்கு வந்து சேராவிட்டாலும், நான் நேரத்திற்கு சென்றதையிட்டு திருப்தியும் பெருமையும் அடைவது.
* நாம் செல்லவிருக்கும் நிகழ்விற்குத் தேவையான உடை, பரிசுப்பொருள், வாழ்த்துமடல், விபரங்கள், மண்டப முகவரி, பயணிக்கும் வீதி விபரம் போன்றவற்றை முதல் நாளே தயார் செய்து வைத்தல்.
* போகும்போது செய்யலாம் என்று வேறெந்த அலுவலையோ சந்திப்பையோ திடீரென இணைத்துக் கொள்ளாமல், ஏனைய விடயங்களுக்கு தனியாக நேரத்தை ஒதுக்கி நேரக்கணிப்பீடு செய்தல்.
* போக்குவரத்திற்கென கணக்கிடும் நேரத்துடன், மேலதிகமாக எப்போதும் குறைந்தது 10 நிமிடங்களையாவது எதிர்பாராத தாமதங்களுக்கென ஒதுக்குதல்.
* முக்கியமான சந்திப்புக்களை அல்லது நிகழ்வுகளை ஒன்றுக்குப் பின் ஒன்றாக, அல்லது மிக நெருக்கமாக திட்டமிடாமல், இடையில் முக்கியமற்ற அல்லது தவிர்க்கக்கூடிய சந்திப்புக்களையும் செருகி திட்டமிடுதல்.
* ஏதாவது ஒரு காரணம் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் என்று, முன்னதாகவே மனதில் தீர்மானங்களை மேற்கொள்வதைத் தவிர்ப்பது. தற் செயலாக நாம் தாமதமாகச் செல்லவேண்டிய தேவை இருந்து, அதற்கான உண்மையான காரணமும் இருந்தால், அழைப்பு விடுத்தவர்களிடம் முன்னதாகவே எமது தாமதத்தைக் கூறி, இத்தனை மணிக்கு நாம் வருவோம் என்று தெளிவான ஒரு அட்டவணையைக் கூறுவது இரு தரப்பினருக்கும் நல்லது.
* எமது வசதிகளை விட, எம்மை அழைத்தவர்களுக்கு நாம் கொடுக்கின்ற மரியாதையும் கௌரவமும் அன்பும், அவர்கள் அழைத்த நேரத்திற்கு சென்று கலந்துகொள்வதுதான் என்பதை மனதில் கொள்வது.

இந்த பிரதான விடயங்கள் தவிர, இன்னும் ஏராளமான ஆலோசனைகளை, துறைசார் வல்லுனர்கள் வழங்கி வருகிறார்கள். யார் என்ன சொன்னாலென்ன, நான் அப்படித்தான் இருப்பேன் என்று அடம்பிடிக்கும் தமிழர்களை யாராலும் மாற்ற முடியாது. அதனால்தான், "எருமை மாட்டில் மழை பெய்வது போல" என்று ஆதிகாலத் தமிழர்களே கூறினார்கள்.

நேரக்கட்டுப்பாட்டை தமிழர்கள் விரைவில் திருத்திக்கொள்ளத் தவறினால், கனடிய நாட்டில் வாழும் வந்தேறு குடிகள் அல்லது புலம்பெயர்ந்த இனத்தவர் பற்றிய வரலாற்று ஏடுகளில், விக்கிப்பீடியா உள்ளடங்கலாக, தமிழர் என்ற இனத்தவர் எதற்குமே நேரத்திற்கு சமூகம் தராத ஒரு விதிவிலக்கு மனிதர்கள் என்று பதியப்பட்டு, ஒரு நிரந்தர அவப்பெயரைத் தேடிக்கொண்ட ஒரு சமூகமாக எம்மினம் வரலாற்றில் இடம்பிடிக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொப் ஃபோர்ட்டின் தனி முயற்சி வெற்றி!

## 'ஷெப்பர்ட்' வரையான சப்வேயை நீடிக்க ஹாப்பர் அரசு 660 மில்லியன் உதவி!



கிப்ளிங்-கென்னடி பாதையில் சேவையிலீடுபடும் புளோர்-டன்போத் சப்வே ரயில் சேவையை ஸ்காபரோ ஷெப்பர்ட் கிழக்குவீதி வரை நீடிக்கும் ரொறன்ரோ நகர மேயர் றொப் ஃபோர்ட்டின் திட்டத்துக்கு ஸ்டீபன் ஹாப்பரின் கனடிய மத்திய அரசு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது. கடந்த மாதம் 22ம் திகதி பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர், மத்திய நிதியமைச்சர் ஜிம் பிளாஹெர்ட்டி, ரொறன்ரோ நகர மேயர் றொப் ஃபோர்ட் ஆகியோருக்கிடையிலான சந்திப்பில் இந்த அறிவிப்பு வெளியானது.

இதனையடுத்து நிதியமைச்சர் 660 மில்லியன் டாலரை மத்திய அரசு ரொறன்ரோ நகர சபைக்கு வழங்கவிருப்பதைத் தெரிவித்ததுடன், மேயர் றொப் ஃபோர்ட் கேட்ட முழுப்பணத்தையும் தமது அரசு வழங்குவதாகவும் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து மேயர் ஃறொப் போர்ட் கருத்து வெளியிடுகையில், "இது ரொறன்ரோ நகர மக்களுக்குக் கிடைத்த பெருவெற்றி" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார். ஆனாலும், பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் மேயர் றொப் ஃபோர்ட் தனித்துப் போராடிப் பெற்ற வெற்றியென நகர வரியிறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புதிய சப்வே விஸ்தரிப்பு கென்னடி நிலையத்திலிருந்து ஆரம்பமாகி லோரன்ஸ் கிழக்கு, எல்ஸ்மெயர் தாண்டி 401 நெடுஞ்சாலையை ஊடறுத்து ஷெப்பர்ட் கிழக்கு வரை சென்றடையும். இதற்கு மேலதிகமாகத் தேவைப்படும் நிதிக்காக ரொறன்ரோவின் சொத்து வரியை ஆகக்கூடியது நான்கு வீதம் வரை அதிகரிக்க ஆலோசிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்துக்கு ஒன்ராறியோ மாகாண அரசு இன்னமும் ஆதரவு வழங்கவில்லையாயினும் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறுகின்றது.

# ரொறன்ரோ மத்திய தொகுதி நாடாளுமன்ற இடைத்தேர்தல்

## லின்டா எதிர் கிறிஸ்ரியா



ரொறன்ரோ மத்திய தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த பொப் ரே தமது பதவியை ராஜிநாமாச் செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு விரைவில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் என் டி. பி கட்சிக்கும் லிபரல் கட்சிக்குமிடையில் கடும் போட்டி இடம்பெறலாமென கூறப்படுகின்றது.



என். டி. பி கட்சியின் அபேட்சகராக பிரபல பத்திரிகையாளரும் பல நூல்களின் ஆசிரியருமான லின்டா மக்குயெக் போட்டியிடத் தெரிவாகியுள்ளார். நீண்ட காலமாக இந்தத் தொகுதியில் வசித்து வருபவரான லின்டா, ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை உட்பட பல ஊடகங்களில் எழுதி வந்தவர். பல நூல்களின் ஆசிரியர். அத்துடன் சமூகச் செயற்பாடுகளில் தம்மை நெருக்கமாக ஈடுபடுத்தி வந்தவர். இவருக்கான ஆதரவு நிகழ்ச்சிகள் கடந்த மாதம் ரொறன்ரோ மத்தி தொகுதியில் நடைபெற்றபோது என். டி. பி. தலைவர் தோமஸ் மல்கெயர் பங்குபற்றியிருந்தார்.

லிபரல் அபேட்சகராக மற்றொரு ஊடகவியலாளரான கிறிஸ்ரியா பிரீலான்ட் போட்டியிடத் தெரிவாகியுள்ளார். வடக்கு அல்பேர்ட்டா வாசியான இவர், அமெரிக்காவின் நியுயோர்க்கில் வசித்து வந்தார். கடந்த மாதமே தமது குடும்பத்துடன் கிறிஸ்ரியா ரொறன்ரோவில் குடியேறினார். கன்சர்வேடிவ் கட்சி சார்பில் கெவின் மூர் என்பவர் போட்டியிடுகின்றார்.

## கனடாவின் சனத்தொகை 35 மில்லியன்

கனடாவின் சனத்தொகை முப்பத்தைந்து மில்லியனைத் தாண்டிவிட்டதாக சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த வருடத்தை விட இப்போது 404,000 ஆட்களின் தொகை கூடியுள்ளது. இது 1.2 வீத அதிகரிப்பாகும். கனடிய சனத் - தொகையில் 75 வீதத்தை மூன்று மாகாணங்கள் கொண்டுள்ளன. இது, ஒன்ராறியோ 38.5 வீதம், கியுபெக் 13.2 வீதம், பிரிட்டிஷ் கொலம்பியா 13.0 என்றவாறு அமைந்துள்ளது. அதேசமயம், நொவாஸ்கொஷியாவின் சனத்தொகை 0.5 வீதத்தினால் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சாரதி லைசன்ஸ் 'ஆன் லைனில்'

ஒன்ராறியோ சாரதி லைசன்ஸை வீட்டிலிருந்தவாறு 'ஆன்லைனில்' புதுப்பிக்கும் வசதியே மாகாண அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த வசதி ஜி, டி, எம் (G,D,M) வகை சாரதி லைசன்சுகளுக்கு மட்டுமே பொருந்தும். கனடாவிலேயே 'ஆன்லைனில்' சாரதி லைசன்சைப் புதுப்பிக்கும் வசதியைப் புகுத்தி உள்ள முதலாவது மாகாணம் ஒன்ராறியோவே. அடிக்கடி பரிசோதனை மேற்கொள்ளவேண்டிய முதியோர், நேரடியாகச் சென்றே தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டும். இவர்கள், மொத்தச் சாரதிகள் தொகையில் சுமார் இருபது வீதமானவர்கள்.

## கனடிய பிரஜாவுரிமை மகாராணிக்கு விசுவாசம்

கனடியப் பிஜாவுரிமையைப் பெறுவதற்கான சத்தியப் பிரமாணத்துக்கு, மகாராணிக்கு விசுவாசம் தெரிவிப்பது கட்டாயமென ஒன்ராறியோ உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. கனடாவில் நிரந்தரக் குடியுரிமையில் வசிக்கும் 3 வெளிநாட்டவர் தாக்கல் செய்த வழக்கொன்றில், மகாராணிக்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம் செய்வதை ஆட்சேபித்திருந்தனர். ஆனால் நீதிமன்றம் இது கனடிய அரசியல் அமைப்பின் கீழ் அவசியமானதெனத் தீர்ப்பு வழங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ரொறன்ரோவில் பல்கலாசார நிகழ்வு

## பிக்கரிங்கில் வருடாந்த ஒன்றுகூடல்











கனடிய மத்திய அமைச்சர்கள் ஜேசன் கெனி மற்றும் கிறிஸ் அலெக்சாந்தர் ஆகியோர் கலந்துகொண்ட பல்கலசார நிகழ்ச்சியொன்று கடந்த மாதப் பிற்பகுதியில் ரொறன்ரோ ஆர்மீனியன் மண்டபத்தில் நடைபெற்றது. புதிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சராக கிறிஸ் அலெக்சாந்தர் நியமனமானதையடுத்து கலாசார ஒன்றுகூடலொன்று அவரது தொகுதியான பிக்கரிங்கில் கடந்த மாதம் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் பெருமளவிலான ஈழத்தமிழர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி அமைச்சர்களுடன் கலந்துரையாடினர்.

# 'தமிழ் பயில்வோம் - ஆரம்ப நிலை' நூல் வெளியீடு







திருமதி விமலா பாலசுந்தரம் எழுதிய 'தமிழ் பயில்வோம் - ஆரம்ப நிலை' நூலின் வெளியீடு வைபவம் கடந்த மாதம் ஸ்காபரோவில் அறிஞர் சாமி அப்பாத்துரை தலைமையில் நடைபெற்றது. நூலாசிரியர் பிரதிகளை வழங்கும் போது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்களை இங்கு காணலாம். நூலாசிரியரின் கணவர் கலாநிதி இ. பாலசுந்தரம் அருகில் நிற்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிஷ்னி மதீஸ்வரனின் மூன்று மணிநேர ரஸஞான இசை விருந்து












செல்வி பிரதிஷ்னி மதீஸ்வரனின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் கடந்த மாதம் 21ஆம் திகதி பிற்பகல், ரொறன்ரோ ஆர்மீனிய மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. ஓம் சிறீ சக்கர ஞான சபா ஆசிரியர் சங்கீபூஷணம் சிறீமதி கமலா சண்முகலிங்கம் அவர்களிடம் சுமார் பதின்மூன்று வருடங்கள் சங்கீதம் கற்ற பிரதீஷ்னி, நல்லதொரு நாட்டிய தாரகையும், வயலின் இசை மாணவியுமாவார். சிறீ முல்லைவாசல் சந்திரமௌலி (வயலின்), சிறீ கௌரிசங்கர் பாலச்சந்திரன் (மிருதங்கம்), சிறீ கஜஜெயன் பரராஜசேகரம் (முகர்சிங்), சிறீ ரமணா இந்திரகுமார் (கடம்), சிறீ கார்த்திக் வெங்கடராமன் (கஞ்சிரா), செல்வி. அனுஜா இந்திரகுமார் (தம்புரா) ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக அமைந்து இசை அரங்கேற்றத்தை ஓர் இசைவேள்வியாக மாற்றி சபையோரின் பலத்த பாராட்டைப் பெற வைத்தனர். இடைவேளை இல்லாது மூன்று மணி நேரத்துக்கு மேலாகத் தொடர்ச்சியாக இடம்பெற்ற இந்நிகழ்ச்சி, பிரதிஷ்னியின் அபாரமான குரல் வளத்தினாலும் களைப்பற்ற பாவனைகளாலும் அவையோரைக் கவர்ந்து அடிக்கடி கையொலியைப் பெறவைத்தது. பிரதம விருந்தினராகப் பங்குபற்றிய புகழ்பெற்ற கலைஞர் கலாநிதி அழகானந்தா நாத் தமதுரையில் இசைச்செல்வி பிரதிஷ்னியின் திறமைகளைப் புகழ்ந்து வளமான எதிர்காலத்துக்கு வாழ்த்துக்கூறினார். மண்டபம் நிறைந்திருந்த ரசிகர்களால் மதிப்புயர்ந்த இந்நிகழ்வில் ரொறன்ரோ கிழக்கு சத்ய சாயி நிலையத்தினர் - குறிப்பாக இளையோர் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. (ஒளிப்படங்கள்: மாருதி வீடியோ)

# ஜேர்மனியில் இடம்பெற்ற 'வெற்றிமணி' விழா






ஜேர்மனியிலிருந்து வெளிவரும் 'வெற்றிமணி' சஞ்சிகையின் சிறப்புக் கலைவிழாவொன்று கடந்த மாதம் 14ஆம் தகதி அங்கு இடம்பெற்றது. சஞ்ஜேயின் இசை வண்ணத்தில் உருவான பைரவன் இசைஅல்பம் இங்கு வெளியிடப்பட்டது. தமிழகத்திலிருந்து பின்னணிப் பாடகர் மல்ராம், மாதங்கி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இசை அல்பத்தில் மாதங்கி, என்.எஸ்.கே. ரம்யா, எம் சி. ஜீவா, சஜித் ரோகினி, முருகேஸ்வரி, ஷாலினி சதிஷ் ஆகியோர் பாடியுள்ளனர். பாடல்களை கவிஞர் சேவியர் நிலவொளி மற்றும் சிவகுமாரன் ஆகியோர் எழுதியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Brimley Road Medical Centre
# WALK-IN CLINIC
## & FAMILY PRACTICE

* புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்

*ஆண், பெண் குடும்ப மருத்துவர்களுடன் 7 நாட்களும் சேவை

Dr. உதயன் சோமசுந்தரம், MD,CCFP
Dr. சுபாதினி செந்தில் மோகன், MD,CCFP
Dr. நஸ்ரத் கான், MD,CCFP

| | |
|---|---|
| திங்கள் - வியாழன் | 9:00 - 7:00 |
| வெள்ளி | 9:00 - 5:00 |
| சனி & ஞாயிறு | 9:00 - 1:00 |


* ஆய்வு கூடச் சேவையும் (Life Lab), மருந்தகச் சேவையும் (IDA Pharmacy) இங்கு கிடைக்கும்

**(416) 412 3333**

**3333 Brimley Road**
Scarborough, ON M1V 2J7
(Between **Steeles** & **McNicoll**)











# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

**5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9**
**(416) 288-1419**

**சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்**

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அறலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# திருமந்திரம் காட்டும் வாய்மை

வள்ளுவர் செய்திருக்குறளை மறுவறநன்கு
உணர்ந்தோர்கள்
உள்ளுவரோமனுவா திஒருகுலத்துக்கு
ஒருநீதி
சுந்தரம்பிள்ளை

சாட்டையிற் பம்பரசாலம்போ லெலாம்
ஆட்டுவான் இறையென வறிந்து நெஞ்சமே'
தேட்டமொன் றறவருட் செயலி னிற்றியேல்
வீட்டறந் துறவற மிரண்டும் மேன்மையே
தாயுமான சுவாமிகள்

கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த வள்ளுவனாரின் குறளுக்கும் பதின்மர் உரை வகுத்துள்ளனர். அவற்றுள் பரிமேலழகர் உரை மேலானது. புது உரைகள் வகுக்கப்பட்டுள்ளன. யாமறிந்த புலவரிலே கம்பனைப்-போல், வள்ளுவன்போல், இளங்கோவைப்போல் ஒருவரைக் கண்டதில்லை. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு. மூன்று பிரிவுகளையுடையது குறட்பா. அவை அறம், பொருள், இன்பம். சுபமாணிக்கம் அவர்கள் வள்ளுவம் என்றோர் நூல் தந்துள்ளார். நம் நாட்டவர் கந்தையாப் பண்டிதர் "ஒழிபியலுக்கு" உரை வகுத்துள்ளார். பல மொழிகளிலே குறட்பா உரை வகுக்கப்பட்டுள்ளது. ரா. நெடுஞ்செழியன் தொட்டு முனிசாமிவரை பலர் உரை கண்டுள்ளனர். பழைய உரையைப் புதிதாக்கியுள்ளனர். வாழ்வியலான இந்நூலைப் படித்துப் பாதுகாப்பது நம் தலையாய கடனாம். திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்-பட்டுள்ளது. வாய்மை, மெய்மை குறளின் மேம்பாடாகும். உண்மை, வாய்மை, மேன்மை என்பன திறமையின் இலச்சினைகள். எனவே நாமும் மெருகு ஊட்டுவோம்.

எங்கள் மண்ணில் ஒரு பெரியவர் வாழ்ந்தவர். அவரை இளைஞர்கள் 'கற்றதனாற் கிடைத்த பயனென் கொல்' எனப் பகிடி செய்வர். அவர் என்ன சொல்வார் 'தன்னைக் கொல்லுதல்' எனப் பகிடி செய்வார். நான் எனது என்ற அகங்கார மமகாரங்களை அழிப்பதே கல்விப் பயனாம். கற்கை நன்றே கற்கை நன்றே என்பது புலவர்கள் கூற்று. செம்பொருள் காண்பது அறிவு, மெய்ப்பொருள் காண்பது அறிவு எனப் பதில் இறுப்பர். இந்நுண்பொருளைக் கற்றுத் தெளிவோம். திருமந்திர ஆசிரியரின் கூற்றை இனிப் பார்ப்போம். வாய்மை, உண்மை, பொய்ப் பொருளை நீக்கி மெய்ப்பொருளைச் சேர்ப்பதே நம் மேன்மையாகும்.

அற்றது உரைக்கில் அருள் உபதேசங்கள்
குற்றம் அறுத்த பொன் போலும் கனல் இடை
அற்று அறவைத்து,
இறைபற்று அற மாற்றிடின்
செற்றம் அறுத்த செழும்சுடர் ஆகுமே -திருமந்திரம்38.2595

அப்பொருள் எத்தமைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு. குறட்பிரயோகம் ஃ இப்போக்கிலே மெய்ப் பொருள், நுண்பொருள், செம்பொருள் குறட்பாக்களிற் பாவிக்கப்பட்டிருக்கிறது. செம்பொருள் எனின் இறைவனையும் குறிக்கும். வள்ளுவப் பெருந்தகையை விஞ்சி, திருமூல நாயன-ார் இறைவனைச் செம்பொருள் என்றார். வள்ளுவர் பார்வையை மாற்றி இறைவனைக் கடவுள் எனப் பாடியுள்ளார். முன்னைய வியாசத்தில் கதாப்பிரசங்ககாரர் (கிருபானந்த வாரியார்) சுத்தமாய் பொய் சொன்னார். ஆனால் அது மெய்மை. அப்பெண் போன பாதையை மாற்றினார். பெண் இறக்கவில்லை, பாதுகாக்கப்பட்டாள். அது தீமையிலாத சொல். அடுத்தநாள் அக்கொலைஞர் கொலை செய்யப்பட்டுள்ளான். அது ஊழ்வினை. இனிமையும் நீர்மையும் தமிழ் எனப்படும். நீர்மை நிலையாந்தன்மை. ஆக வாய்மை இறைவன் எனப் பொருள் என திருமந்திரம் எடை போடுகிறது. பொற்கொல்லன் பவுணை நெருப்பிலே போட்டுப் புடம் போடுகிறான். இரும்பும் அவ்வண்ணமே சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும். சுடச் சுட நோற்கிற் பார்க்கு. ஆக இனி அடுத்த திருமந்திரத்தை நோட்டம் விடுவோம்.

எல்லாம் அறியும் அறிவுதனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபம் அங்குஇல்லை
எல்லாம் அறிந்த அறிவினை நான் எனில்
எல்லாம் அறிந்த இறை எனலாமே (2596)

யாவற்றையும் அறியும் சிவமான பேரறிவுப் பொருளைவிட்டுப் பிற உலகியல் பொருள் எல்லாவற்றையும் அறிவதால் பயன் ஒன்றும் இல்லை. அங்ஙனம் எல்லாவற்றையும் அறியும் பேரறிவுப் பொருளை நான் என்று பாவனைப் பயனால், உலகில் உணரில், எல்லாவற்றையும் அறியும் சிவமாகச் சிவன் விளங்கும்.

தலைநின்ற தாழ்வரை மீது தவம் செய்து
முலைநின்ற மூதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனைக் கண்டு கொண்டேனே.
(2597)

தலையில் பொருந்தியுள்ள மேருவின் மீது நின்று இடைவிடாது தியானம் செய்து அருள் சுரக்கும் பார்வதி அம்மையை ஒரு பக்கம் கொண்ட இறைவனை யானும், ஊன் பொருந்திய உடல் இயல்பைக் கடந்து சந்திரகலையில் மறைந்து விளங்கும் பெருமானைக் கண்டு கொண்டேனே.

எனவே சத்தியமே நிட்சயம் எனக் காட்டிய அரிச்சந்திரனின் கதை கண்டுதானும் அந்தச் சத்தியவேட்கையிற் காந்தியடிகள் சத்தியமே இலட்சியமெனப் போராடி சுதந்திரம் கண்டார். உண்மைதான் தெய்வம் என்றார் காந்தி மகான். எனவே வாய்மையின் தாற்பரியம் இதுவேயாம்.

சிந்திப்போம் மறுமுறை.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB

## Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

www.computek.edu



We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றுமுள்ள செந்தமிழ் 70

நக்கீரன்



## வைணவம் வளர்த்த தமிழ் இலக்கியங்கள்

சைவ சமயத்துக்குப் பன்னிரு திருமுறைகள் இருப்பது போல் வைணவ சமயத்துக்கு நாலாயிர திவ்விய பிரபந்தம் இருக்கிறது.

இளங்கோ இயற்றிய சிலப்பதிகாரம், மதுரைக் கூல வாணிகர் சாத்தனார் இயற்றிய மணிமேகலை இரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என அழைப்பர். இவை சங்க காலத்திற்குப் பின் தோன்றியவை. இவை தமிழில் எழுதப்பட்ட வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி ஆகிய காப்பியங்களில் அய்ம்பெரும் காப்பியங்களில் அடங்கும்.

இளங்கோவும் சாத்தனாரும் ஒரே காலத்தவர் என்பது ஒருபுறமிருக்க சிலப்பதிகார கதையின் தொடர்ச்சியாகவே மணிமேகலை எழுதப்பட்டுள்ளது. மணிமேகலையின் கதைக்களன், கதை மாந்தர், கதை நடக்கும் காலம் ஆகியவை சிலப்பதிகாரத்தைத் தொடர்வதால் மணிமேகலையும் சிலப்பதிகாரமும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன என முன்னர் பார்த்தோம்.
சிலப்பதிகாரம் சமண சமய கோட்பாடுகளை ஆங்காங்கே எடுத்து இயம்பினாலும் அது சமணசமய காப்பியம் என்று அழைக்கப் படுவதில்லை. மணிமேகலை அப்படியல்ல. அது முழுக்க பவுத்த மதக் கோட்பாடுகளை விளக்கும் காப்பியமாகும். மணிமேகலை காப்பியத்தின் தலைவி மணிமேகலை சிலப்பதிகாரத்தின் கோவலன் மற்றும் மாதவி என்பவர்களின் மகளாவாள். கோவலனின் துயர மரணத்திற்குப் பிறகு மாதவியும் மணிமேகலையும் பவுத்த மதத்தை மேற்கொண்டு இருவரும் துறவுக் கோலம் பூண்கிறார்கள்.

இந்த இரட்டைக் காப்பியங்கள் போலவே சைவமும் வைணவமும் இரட்டை மதங்களாகும். கிபி 10 ஆம் நூற்றாண்டுவரை சைவமும் வைணவமும் ஒரே மதமாகவே இருந்துள்ளன. அதன் பின்னரே சைவத்துக்கு சிவனும் வைணவத்துக்கு திருமாலும் முழுமுதற் கடவுளாகத் தோற்றம் பெற்றனர். சைவ, வைணவ கோயில்களில் பூசை, வழிபாடு ஒரே மாதிரி இருந்தாலும் சைவக் கோயிலில் திருமாலும் வைணவ கோயிலில் சிவனும் எழுந்தருளி இருந்தாலும் முழுமுதற் கடவுளர் ஒன்றல்ல.
சைவ சமயத்தவர்க்கு பன்னிரு திருமுறைகளைப் போல் வைணவர்களுக்கு நாலாயிர திவ்விய பிரபந்தம். இதனைத் தமிழ்வேதம் என்றும் சிறப்பித்துச் சொல்வார்கள். இருந்தும் திருமுறைகள் சரி, திவ்வியபிரபந்தம் சரி இரண்டும் ஒரே பொது மூலமான வேதத்தை அடிப்படையாகக் கொண்டு உண்டானவையே. தேவாரத்தையும் பிரபந்தத்தையும் பாடிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் வேதத்தின் பெருமையையே பேசுகிறார்கள்.

திருநாவுக்கரசர் சிவபிரானையே ஆரியன் என்றும் தமிழன் என்றும் கூறுகிறார். தமிழ் ஆகிய மொழி பேசுவோனை, மொழிக்குரியவனைக் குறிக்கும் இனப் பெயராகத் 'தமிழன்' என்ற சொல் காட்டி நிற்கிறது. இவ்வாறு 'மொழி வழி இனம்' என்ற புது மரபினைத் தோற்றுவித்தவர் அப்பரடிகளே. முதன்முதல் 'தமிழன்' 'ஆரியன்' என்ற பெயர்களை மொழிந்தவரும் அவரே.
"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணாமலையுறையெம் மண்ணல் கண்டாய்"
"செந்தமிழோ டாரியனைச் சீரி யானை"
இன்று நாம் தமிழர் எனப் பெருமிதத்துடன் பேசுதற்கு அன்றே வித்திட்ட பெருமை திருநாவுக்கரசர் அவர்களையே சாரும்.

இனி தமிழ்மொழிக்கு வளம் சேர்த்த வைணவ இலக்கியங்கள் பற்றிப் பார்ப்போம். திருமாலை (விஷ்ணுவை) மேலான பரம்பொருளாகக் கொண்ட சமயம் வைணவம் ஆகும்.
கிபி ஏழாம் நூற்றாண்டு முதல் கிபி 9 ஆம் நூற்றாண்டு முடிய வாழ்ந்த ஆழ்வார்கள் திருமாலின் புகழைப் பாடிப் பரப்பினர். திருமாலே முழுமுதற் கடவுள், அமரரும் பொழும் பரம்பொருள் எனப் பாடினர்.

வேதகாலத்தில் இருந்த பல தெய்வக் கோட்பாட்டில் விஷ்ணு ஒரு சிறு தெய்வம். சிவனும் (உருத்திரன்) அவ்வாறே. விஷ்ணு பசுக் கூட்டங்களைக் காப்பவன் என்று இருக்கு வேதம் குறிப்பிடுகிறது.

வேதத்தில் உள்ள பாடல்கள் ஆரியர்கள் தங்களுக்கு நல்ல உணவு, நல்ல பானம் (சோமபானம்), நல்ல மழை, தானிய விளைச்சல், தானம் (தட்சணை) அதிக பால் தரும் பசுக்கள், யாகங்கள் செய்திடச் செல்வம், வேகமாகச் செல்லும் குதிரைகள், உறுதியான தேர்கள், நல்ல உடல் நலம், மன உறுதி, வேத மந்திரங்களை நினைவில் வைத்துக்கொண்டு வேத மந்திரங்களைப் பாட நல்ல வாக்கு மற்றும் தங்களின் வெற்றிக்காகவும் எதிரிகளின் வீழ்ச்சிக்காகவும் தேவர்களின் உதவி வேண்டி அவர்களைப் போற்றும் நோக்கிலே அமைந்தவை. மேலும் அவர்களது மன்னர்களின் சில வரலாற்றுக் குறிப்புகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. முக்கியமாக ஆரியர்களுக்கும் அவர்களது எதிரிகளான தாசர் எனபடும் அசுர இனத்தாருக்கும் மற்றும் கிராதர்கள் என்ற இனத்தாருக்கும் இடையிலான போர்கள் பற்றிய குறிப்புக்கள் குறிப்பிடத்தக்கவை.

கிமு 1,500 ஆண்டுகளுக்குப் பிற்பட்ட காலத்தில் ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தனர். அப்போது ஆரியர்களுக்கு முற்பட்ட பழமையான இனத்தவர்களான திராவிட இனத்தவரோடு பகைமை பாராட்டினர். பின்னர் இந்த பகைமை குறைந்து திராவிட இனத்தவரோடு உறவு பூண்டு வாழத் தலைப்பட்டனர்.

இப்போது உள்ள இந்து சமயம் இந்த இருவேறு பண்பாட்டுக் கலப்பினால் உண்டான மதமாகும். தொல்காப்பியம் திருமாலை முல்லை நிலத் தெய்வமாகக் குறிப்பிடுகிறது.
'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே. (பொருளதிகாரம்-அகத்திணை இயல்-பாடல் எண்:5)

'மாயோன் ஆகிய திருமால் பொருந்திய காட்டு உலகமும் சேயோன் ஆகிய முருகன் பொருந்திய மேகங்களை எல்லையாகக் கொண்ட உலகமும் வேந்தன் ஆகிய இந்திரன் பொருந்திய இனிய புனலை உடைய உலகமும் வருணன் ஆகிய சூரியன் பொருந்திய பெருமணலைக் கொண்ட உலகமும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று சொல்லிய முறையால் சொல்லப் படும்.'

காடுறை என்பது தவறு அது கானுறை என்றிருக்க வேண்டும் பெருமணல் என்பது தவறு பெருமதில் என்று ➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைணவம் வளர்த்த...

வந்திருக்க வேண்டும் எனச் சொல்லாடல் செய்வாரும் உண்டு. திராவிடரைப் போன்று விஷ்ணுவின் நிறம் கருமை ஆகும். திருமாலின் அவதாரங்களில் ஒன்றான கண்ணன் கருமை நிறமுடையவன். கண்ணன் முல்லை நிலத்தில் வாழும் ஆயர்களின் தலைவன். ஆரியர்கள் அல்லாத அந்தணர்களுக்கு முற்றிலும் எதிரான விருஷ்ணி என்ற இனக் குழுவைச் சார்ந்தவன் கண்ணன் என்று கூறப்படுகிறது.

வேதகாலத்தில் இருந்த கடவுள் நம்பிக்கை அச்சத்தை அடிப்படையாகக் கொண்டது ஆகும். கடவுளை அறிவுபூர்வமாகப் பார்க்கும் முறை உபநிடத ஞான நெறியாகும். கடவுளை உணர்வுபூர்வமாக அடையும் நெறி பக்தி ஆகும். வேதநெறியின் சாதி அமைப்புக்கு எதிரான இயக்கமே பக்தி இயக்கமாகும். பக்தி இயக்கம் ஆரிய - திராவிட பண்பாட்டுக் கூறுகளின் கலப்பால் உருவான புது நெறி என்று கொள்ளலாம். இதில் திராவிடப் பண்பாட்டுக் கூறுகள் மிகுதி.

ஆழ்வார்கள் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கியவர்கள் ஆவர். கிபி 6ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வைணவம் புத்துயிர் பெறத் தொடங்கியது. தேவார மூவரைப் போல திருமால் அழகிலும் குணத்திலும் ஆழ்ந்து நெஞ்சுருகப் பாடியுள்ளனர். அவர்கள் பாடிய 4000 பாடல்களையும் (பாசுரங்கள்) 11 ஆம் நூற்றாண்டில் நாதமுனி என்பவர் நாலாயிரத்திவ்விய பிரபந்தம் என்னும் பெயரில் நூலாகத் தொகுத்தார். பன்னிரு ஆழ்வார்களின் நூல்களே வைணவப் பக்தி இலக்கியங்களாகும். (வளரும்)

## மறு பிறப்புக்கு...

தாய்ப் பசு நீதி கேட்டு ஆராய்ச்சி மணியை அடித்தாக பெரிய புராணம் பேசுகின்றது' வில்லி பாரதத்திலே தருமரின் வேள்விச் சாலைக்கு வந்த அணில் ஒரு பிராமணனின் யாகம் பற்றிப் பேசக் காண்கின்றோம்' நபிகள் நாயகத்திடம் வேடனின் வலையில் அகப்பட்ட மான் ஒன்று தான் குட்டிக்குப் பால் கொடுத்துவிட்டுத் திரும்பும் வரை தனக்குப் பிணை நிற்கும்படி கேட்டதாக படிக்கின்றோம்' கம்பராமாயணத்திலே சடாயு என்னும் பறவை சீதையைக் காப்பாற்ற இராவணனுடன் போராடியதாகப் பார்க்கின்றோம்'

இவையெல்லாம் புனைகதைகள் என்று ஒதுக்கி விடும் உள்ளங்கள் இந்த வீடியோ காட்சியைப் பார்த்தால் தங்கள் எண்ணங்களை மீளாய்வுக்கு உட்படுத்த நேரிடும்' மறுபிறப்பு என்று ஒன்று உண்டு என்ற செய்தியை பழைய பிறப்பின் தொடர்ச்சியாக அபூர்வமாக நிகழும் சில சம்பவங்கள் நிரூபித்து நிற்கின்றன'

இதைத்தான் ஔவை போன நாள் செய்த அவை மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் என்றாள்' இந்த ஊன் எடுத்த பின் செய்த தீவினை யாதொன்றும் இல்லைப் பிறப்பதற்கு முன் செய்த தீவினை என்றார் பட்டினத்தார்' எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் என்றார் மணி வாசகர்' ஏழு கடல் மணலை அளவிடில் அதிகம் எனது உடல் பிறவி அவதாரம் என்றார் அருணகிரி நாதர்'
முற்பிறப்பும் மறு பிறப்பும் உயிர்களுக்கு உண்டு. பிறவி தோறும் எடுக்கும் தேகங்கள் வேறுபட்டாலும் சில உணர்வுகள் பிறவி தோறும் தொடர்ந்து பற்ற வல்லன என்பதற்கு சிறுத்தை நெறி தவறிக் கிடைத்த உணவை உண்ணாமல் மறுத்து ஒதுக்கியதே மிகச் சிறந்த உதாரணமாகும்'●

## 'குட்டி' இளவரசருக்கு உலகளாவிய வரவேற்பு!



பிரித்தானிய அரச குடும்பத்தின் புதிய வாரிசாக இளவரசர் வில்லியம்-கேத் மிடில்டன் இணையருக்கு ஆண் குழந்தையொன்று கடந்த ஜுலை 22ஆம் திகதி பிறந்தது. 2011ல் திருமணம் செய்த இந்தக் காதல் ஜோடிக்குப் பிறந்த 'குட்டி' இளவரசருக்கு ஜோர்ஜ் அலெக்ஸான்டர் லுயிஸ் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த நிகழ்வினையொட்டி பிரித்தானியாவில் புதிய வெள்ளி நாணயமொன்று வெளியிடப்பட்டுள்ளது. ஜுலை 22ஆம் திகதி பிரித்தானியாவில் பிறந்த சகல குழந்தைகளுக்கும் இந்த வெள்ளி நாணயம் அன்புப் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. 'குட்டி' இளவரசர் 'கேம்பிரிஜ் இளவரசர் ஜோர்ஜ்' என அழைக்கப்படுவார் என்று பக்கிங்ஹாம் அரண்மனை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இவருக்குக் கிடைத்த பல மில்லியன் பவுண்ஸ் பெறுமதியான அன்பளிப்புகளை பொது நிறுவனங்களுக்கு வழங்க குடும்பத்தினர் முன்வந்துள்ளனர்.

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank®
You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

**உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்**





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge
FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng
Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**
Funeral Counsellor

**416-431-3600** Ext:2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# உலகக் கிண்ண கால்பந்து 2014

காலப்பந்து திருவிழாவான உலகக் கிண்ண கால்பந்து போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வருகிறது.

2010ம் ஆண்டு உலகக் கிண்ண போட்டி தென் ஆபிரிக்காவில் நடைபெற்றது. இதில் ஸ்பெயின் சாம்பியன் பட்டம் பெற்றது. 2014ம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கால்பந்து போட்டி பிரேசிலில் ஜுன் 12ம் திகதி முதல் ஜுலை 13ம் திகதி வரை நடக்கிறது.

இதில் 32 அணிகள் பங்கேற்கின்றன. போட்டியை நடத்தும் 5 முறை சாம்பியனான பிரேசில் அணி நேரடியாக தகுதி பெற்றுவிட்டது. மீதியுள்ள 31 அணிகளும் தகுதி சுற்று மூலம் தகுதி பெறும். ஒவ்வொரு கண்டம் வாரியாக அணிகள் தெரிவு செய்யப்படும்.

இதுவரை உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்கு 10 அணிகள் தகுதி பெற்றுள்ளன.

முதல் ஐரோப்பிய நாடுகள்: உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற்ற முதல் ஐரோப்பிய நாடுகள் என்ற பெருமையை இத்தாலியும், நெதர்லாந்தும் பெற்றுள்ளன. நெதர்லாந்து அணி, கடந்த உலகக் கிண்ண இறுதிச்சுற்றில் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

ஆசிய கண்டத்தில் இருந்து 4 அல்லது 5 நாடுகள் தகுதி பெற வேண்டும். ஜப்பான், தென்கொரியா, ஆஸ்திரேலியா, ஈரான் ஆகிய அணிகள் தகுதி பெற்றுள்ளன. வடக்கு, மத்திய அமெரிக்க மற்றும் கரிபீயனில் இருந்து 3 அல்லது 4 நாடுகள் தகுதி பெறவேண்டும்.

அமெரிக்கா, கோஸ்டாரிகள் அணிகள் தகுதி பெற்று உள்ளன.

அமெரிக்க 2-0 என்ற கோல் கணக்கில் மெக்ஸிகோவை வீழ்த்தி உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற்றது.

தென் அமெரிக்காவில் உள்ள நாடுகளுக்கு இடையேயான ஆட்டத்தில் பராகுவேயின் தலைநகர் அசன்சியனில் பராகுவேயும், அர்ஜெண்டினாவும் மோதின. இந்த ஆட்டத்தில் அர்ஜெண்டினா அணி 5-2 என்ற கோல் கணக்கில் வென்று உலகக் கிண்ண போட்டிக்குத் தகுதி பெற்றது.

அர்ஜெண்டினாவுக்கு கிடைத்த இரு பெனால்டி வாய்ப்புகளை மெஸ்சி கோலாக மாற்றினார்.
ஐரோப்பா கண்டத்தில் இருந்து இத்தாலி, நெதர்லாந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன. இன்னும் 11 அணிகள் தகுதி பெற வேண்டும்.

தென் அமெரிக்க கண்டத்தில் இருந்து 2 முறை சாம்பியனான அர்ஜெண்டினா மட்டும் தகுதி பெற்று உள்ளது. இன்னும் 3 அல்லது 4 நாடுகள் தகுதி பெற வேண்டும்.

ஆப்பிரிக்க கண்டத்தில் இருந்து ஒரு நாடு கூட தகுதி பெறவில்லை. ஆப்பிரிக்காவில் இருந்து 5 அணிகள் தெரிவாகும்.
1958ம் ஆண்டு உலகக் கிண்ண போட்டியைத் தவிர, மற்ற உலகக் கிண்ண போட்டிக்கு இத்தாலி அணி தகுதி பெற்றுள்ளது அந்த அணிக்கு உள்ள சிறப்பாகும்.

அதேசமயம், கிண்ணத்தை வெல்லும் அணியாகக் கருதப்படும் ஜேர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து அணிகள் உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெறும் விளிம்பில் உள்ளது.

உலகக் கிண்ண போட்டிக்கான தகுதி சுற்று ஆட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.●

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •
Scholarship Plan [RESP]
Any Referral Service
JRB Universal Inc.
Almost All Services Available
647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.
• Credit Counseling • Accounting & Tax Services •




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








எஸ். காந்தி

# வெள்ளிப் பணம் 80

இத்தொடரில் நாம் "கடன் வாழ்க்கையும் கனடாவும்" என்கின்ற தலைப்பில் சில தகவல்களைப் பார்ப்போம். ஏறத்தாழ 25ம் ஆண்டுகளுக்கு முன்பு தாயகத்தில் எம்மவர்கள் தாம் சேமித்த பணத்தின் மூலமே பெரும்பாலும் ஒரு பொருளையோ அல்லது சேவைகளையோ பெறும் நடைமுறையாகக் காணப்பட்டது. கடன்பட்டுச் செலவுசெய்து பழக்கப்படாத சூழலில் வாழ்ந்த நாம் கனடாவில் கடன் இல்லாமல் வாழமுடியாத சூழலுக்கு மாறியுள்ளோம். இது ஒன்று தவறான விடயம் அல்லாத போதும் இதனைச் சரியான முறையில் கையாள முடியாமல் போகும்போது பல சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

இன்று கனடாவில் கடன் இல்லாதவர்கள் இல்லை என்று நிச்சயமாக கூறமுடியும். இது வருமானம் குறைந்தவர்கள் தொடக்கம் வருமானம் கூடியவர்கள் வரையில் கடன்தொகைகள் வேறுபட்டு அமையுமே தவிர கடன்பழு இருந்து கொண்டேயிருக்கும். கடன் அட்டையில் இருந்து வியாபாரக்கடன்கள், முதலீட்டுக் கடன்கள் வரையில் பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாக கடன்கள் அமைகின்றன.

நுகர்ச்சிக் கடன்கள் அவையாவன: அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வாடகை மற்றும் ஆடம்பரத் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்வதாக அமைகின்றது. வீட்டுக்கடன்கள் இது வீடு வாங்குதற்கான கடன்கள். இதனை ஈட்டுக்கடன்கள் என அழைப்பர். ஒருவர் ஒரு வீடு வாங்கி அதற்கான கடனை அடிப்படைத் தேவைகளுக்கான நுகர்ச்சிக்கடனாக எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வாங்கும்போது அது முதலீட்டுக்குரிய கடன்களாக மாறுகின்றது.

முதலீட்டுக் கடன்கள் இவை வியாபார முயற்சிகளை ஆரம்பிப்பது, வியாபார நிலையங்களை வாங்குவது, நீதி முதலீட்டுக்கான கடன்கள் என பல்வேறு வகைகள் உண்டு. அத்துடன் மாணவர்களின் உயர்கல்விக்கான கடன்களும் அவர்களின் நீண்டகால கடன்களாகக் கொள்ள முடியும்.

இப்படியாக கடன்களைப் பெறும் நாம் திடீரென ஏற்படும் நிரந்தர வேலையிழப்பு, வியாபார முயற்சியின் தோல்வி அல்லது சுகயீனம் மற்றும் ஏனைய காரணங்களால் கடன்களை தவணைமுறையில் செலுத்த முடியாத நிலையில் வக்குரோத்து நிலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனை ஆங்கிலத்தில் Bankruptcy என அழைக்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் கனடிய புள்ளிவிபரங்களைப் பார்க்கின்ற பொழுது இக்கட்டுரை எழுதுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு வெளியாகிய புள்ளிவிபரத்தில் ஒரு கனடியக் குடிமகன் உழைக்கின்ற வருமானம் ஒரு டாலராக இருக்கும் போது அவருடைய கடன் 1.63 சதமாக இருப்பதாக கனடா Canadian federation of student என்ற அமைப்பு கூறுகின்றது. ஏறத்தாழ 171இ000 கனடிய மாணவர்கள் அத்தகைய சூழ்நிலையில் இருக்கின்றார்கள்.

தற்பொழுது இளைப்பாறும் நிலைக்குச் செல்ல இருப்பவர்கள் அதாவது இவர்களை பொருளாதார வார்த்தையில் baby boomers என அழைப்பர். இவர்கள் 1945ம் ஆண்டுக்கும் 1964ம் ஆண்டுக்கும் உட்பட்ட பகுதியில் பிறந்தவர்களாக இருக்கின்றார்கள்.

இவர்கள் தொழிற்சந்தையில் இருந்து இளைப்பாறும் வயதை நோக்கி வருகின்றார்கள். இவர்களுடைய சேமிப்புகள், முதலீடுகள் கடந்த காலங்களில் அடிக்கடி ஏற்பட்ட பொருளாதாரச் சுருக்கம் காரணமாக ஏற்பட்ட தாக்கத்தால் இவர்களும் கடன்பழுவில் அகப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. சில முதியவர்கள் இளைப்பாறும் வயதை அடைந்தும் பகுதி நேர வேலை செய்து வருகின்றதாகவும் சிலர் நிலையான சொத்துக்கள் சிலவற்றை விற்று அதன் மூலம் தனது வாழ்க்கைச் செலவுகளை சமாளிப்பதற்கு தயாராகி வருவதாகவும் ஒரு வங்கியின் அறிக்கை கூறுகின்றது.

கால்நூற்றாண்டு கனடா வாழ்வியலில் இருக்கும் எமக்கு இங்கு தரப்பட்ட சில தரவுகள் பொருத்தமற்றதாகக் காணப்பட்டாலும் கனடிய பொருளாதார நிலையை புரிந்துகொள்ள உதவும் என்கின்ற நோக்கில் இக்கட்டுரை பயனுள்ளதாக அமையுமென எதிர்பார்க்கலாம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
**S.P. Importers**



**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

## கை கால்களில்..

புண்கள், கடைவாய்ப் புண், நாக்கு அவிதல் போன்ற பிரச்சனைகளையும் விட்டமின் Vitamin B12 குறைபாடு ஏற்படுத்தும். மது அருந்துபவர்களிலும் விறைப்பு எரிவு நோய்கள் வருவது அதிகம். மது அருந்தும் சிலர் ஒரு Vitamin B12 ஊசி அடித்துவிடுங்கோ என வருவதுண்டு. ஓட்டைப் பானையில் தண்ணீர் விட்டு நிரப்ப முனைபவர்கள் அவர்கள். மதுவினால் பல பாதிப்புகள் ஏற்படும். அதில் போசாக்கு உணவின்மையால் ஏற்படும் B12 குறைபாடும் ஒன்று. ஊசி போடுவதால் மட்டும் அவைகளைக் குணமாக்க முடியுமா? புகைத்தலும் மற்றொரு காரணமாகும்.

எமது உடலில் கல்சியம், பொட்டாசியம் போன்ற தாதுப் பொருட்கள் உள்ளன. இவற்றில் ஏற்படும் குறைபாடுகளும் மாற்றங்களும் அத்தகைய அறிகுறிகளுக்கு காரணமாகலாம்.
விறைப்பும் உணர்வு குறைதலும் பல பிரச்சனைகளை பாதிப்புற்றவருக்கு ஏற்படுத்தும். பொருட்களை இறுக்கமாக பற்ற முடியாமை, கால்களில் ஆணி முள்ளு ஆகிய குத்துவதால் ஏற்படும் ஆபத்துகள் பற்றிக் கூறினோம்.

உணர் திறன் குறைவாக இருப்பதால் நடக்கும்போது அடி எடுத்து வைப்பது திடமாக இருக்காது. இதனால் விழுவதற்கும் காயம் படுவதற்கான சாத்தியங்களும் அதிகமாகும். வீதி விபத்துகளில் மாட்டுப்படும் அபாயமும் உண்டு. உடனடியாக மருத்துவமனை செல்ல வேண்டுமா?

பெரும்பாலான விறைப்பு எரிவு என்பன படிப்படியாக வருபவை. அவற்றை நீங்களாகவே அவதானித்தால் மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். ஆயினும் கீழ்க் கண்ட அறிகுறிகள் இருந்தால் காலம் தாழ்த்தாது உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.

- திடீரென அங்கங்கள் செயலிழந்து ஆட்டி அசைக்க முடியாது இருந்தால் அவசர சிகிச்சை பெற வேண்டும்.
- விழுந்து அல்லது தலை கழுத்து அல்லது முள்ளந்தண்டில் அடிபடுவதைத் தொடர்ந்து விறைப்பு எரிவு போன்ற அறிகுறிகள் தோன்றினாலும் உடனடியாக ஆலோசனை பெறுங்கள்.
- திடீரென உங்களது அங்கங்களை ஆட்டி அசைக்க முடியாது போனாலும்
- மலம் சலம் வெளியேறுவதை உங்களால் திடீரென கட்டுப்படுத்த முடியாதுவிட்டால்
- திடீரென மயக்கம், நினைவுக் குழப்பம் மாறாட்டம் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால்
- திடீரென ஏற்படும் பார்வைக் குறைபாடு, கொன்னித்தல், நடைத்தடுமாற்றம் போன்றவை இருந்தால் உடனடியாக மருத்துவரை நாடுங்கள்.●

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற
சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

# வடமாகாணசபை தேர்தலில் கூட்டமைப்புக்கு அமோக வெற்றி!



## முன்னாள் நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் முதலமைச்சர்

கடந்த மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற வடமாகாண சபைக்கான முதலாவது தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றது. மொத்தம் 38 ஆசனங்களில் 28ஐ கூட்டமைப்புப் பெற்றதால் மேலதிகமாக இரண்டு போனஸ் ஆசனங்கள் கிடைத்து மொத்த எண்ணிக்கை முப்பதாகியுள்ளது. மகிந்த அரசின் கூட்டுக் குழுவுக்கு ஏழு ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. மன்னாரில் ஒரு ஆசனத்தை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்றது. விடுலைப் புலிகளால் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதென்ற அடிப்படையில் தாயகத்தில் தேசியத்தை நேசிக்கும் மக்கள் வழங்கிய தீர்ப்பும், புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர் வழங்கிய அபார ஆதரவும் இந்த வரலாற்று வெற்றிக்கான காரணிகள். வடமாகாண முதலமைச்சராக கூட்டமைப்பின் பிரதிநிதியான முன்னாள் உயர்நீதி-மன்ற நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். இத்தேர்தலில் ஆகக் கூடிய விருப்பு வாக்குகளான 132,255 இவருக்குக் கிடைத்தன. இரண்டாவது இடத்-தைப் பிடித்த அனந்தி சசிகரனுக்கு (விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகராக விருந்த எழிலனின் மனைவி) 87,870 வாக்குகள் கிடைத்தன. யாழ் மாவட்டத்தில் கூட்டமைப்பில் வெற்றி பெற்ற மற்றையவர்கள் 39,715 வாக்குகளுக்கும் 13,479 வாக்குகளுக்குமிடைப்பட்ட தொகையைப் பெற்றனர். வெற்றிபெற்ற கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கூட்டாக எடுத்த ஒளிப்படம் இங்கு இடம்பெற்றுள்ளது.●

---

# தேசிய அவையின் ஆடலரங்கம்

கனடியத் தமிழர் தேசிய அவையின் இந்த வருட ஆடலரங்கம் நிகழ்ச்சி, இந்த மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, நோர்த்யோர்க்கில் 1133 லெஸ்லி வீதியில் அமைந்துள்ள கொரியன்-கனடிய கலாசார மண்டபத்தில் பிற்பகல் நான்கு மணி முதல் நடைபெறவுள்ளது.

---

### கூடிக் குலாவும்...

சொல்லப்பட்டவை ஒரு பெரிய பந்திப் பரிமாற்றங்களாகும். குடும்பத்தோடு குடும்பமான பந்திப் பரிமாற்றங்கள் சிறியளவில் நடைபெறுவதும் வழக்கம்.

காலமாற்றங்கள் பலவிதத்திலும் எமது நடத்தைகளை மாற்றினாலும் இயல்பான சமூகப் பிராணி என்பது மாறப்போவதில்லை. கூடிக்குலாவி கும்மாளம் போடும் இயல்பு வேட்டுவர் காலத்திலிருந்தே தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது.

இவற்றை அனுபவியாத மனித இனம் றோபோக்களாக உணர்வுகளை அடக்கிப் பணம் பண்ணும் இயந்திர மனிதனாக மாறி விடுகிறது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காப்புறுதியின் பயனைக் காலம் சொல்லும்

# iNFORCE LIFe
## Financial Services Inc.

**a division of**

**iNFORCE**
Group of Companies

**Insurance Solutions for**
**LIFE | HEALTH | GROUP**
**Investment**



## Chandran Rasalingam CHS
President & CEO

**Bus: (416) 321-6000**
**Direct: (416) 909-0400**

**www.inforcelife.com**

10 Milner Business Court, Suite 707
Scarborough ON M1B 3C6

inkwaves.ca

**WANT TO BECOME A FINANCIAL ADVISOR...**
**JOIN OUR FREE CLASSES TO GET YOUR INSURANCE LICENCE FAST!**

**Grow with us. Join our Dynamic Team!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனாஸ் & கோ

**அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்**

**பூஜைப்பொருட்கள், பூ, பூமாலைகள்,**
**மல்லிகைச்சரம், பரதநாட்டிய ஆடை ஆபரணங்கள்,**
HD Video & Photography, Tamil Movies,
கர்நாடக CDs, DVDs, Passport & ID Photo

*'உங்கள் இல்லந்தோறும் இறையருள் பெற'*

**416-292-0033 www.archanas.ca**

**2950 Kennedy Rd. Unit 10A Scarborough (One Block North of Finch)**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தமானில் அருகி வரும் பழங்குடி மக்கள்




ஒரு காலத்தில் அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள் முழுவதும் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த பழங்குடியினர் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். தற்போது சில பழங்குடி இனங்களே எஞ்சியிருப்பதாகக் கருதப்படுகிறது.

ஜரவா என்னும் பழங்குடி மக்கள் அந்தமானின் செல்லப்பிள்ளைகளாவர். சில நூற்றாண்டுகளுக்கு முன்புவரை தெற்கு அந்தமானில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் அவர்கள். ஆங்கிலேயரின் வருகையாலும், நகரமயமாக்கல் காரணமாகவும் வேறு வழியில்லாமல் மேற்குப் பகுதியில் வசிக்கத் தொடங்கிவிட்டனர். தொண்ணூறுகளின் பிற்பகுதியில் ஜரவாக்கள் நாகரிக மக்களோடு சிநேகம் கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். பாராடங் செல்லும் சுற்றுலாப் பயணிகளை வழி-மறித்து அவர்களிடம் உணவுப் பொருட்கள் பெற ஆரம்பித்தனர். அதுபோல ஒருமுறை உணவுக்காக வழிமறித்த பழங்குடியினரை நடனமாட வைத்து அதை இணையத்தில் பரவ விட்டிருக்கிறார்கள்.

அதற்குப் பின்னர் அந்தமான் நிர்வாகம் கடுமையான சட்ட திட்டங்களை வகுத்து, ஜரவா மக்களை மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்கிறது. எனினும் தற்போது ஜரவா மக்கள் தாங்களாகவே வெளியுலகிற்கு வரவும், ஆடைகள் உடுத்தவும், கல்வி கற்கவும் தொடங்கியிருக்கிறார்கள். கவலையளிக்கும் வகையில், ஜரவா மக்கள் தற்போது சுமார் இரு நூறிலிருந்து நானூறு பேர் வரை மட்டுமே எஞ்சியிருக்கிறார்கள்.

அந்நிய படையெடுப்புக்கு முன்பு அந்தமான் முழுவதிலும் வசித்து வந்த ஒத்த மொழிகள் பேசிய பத்துக்கும் மேற்பட்ட இனங்களை தற்போது 'க்ரேட் அந்தமானீஸ்' என்று பகுத்து வைத்திருக்கிறார்கள். இருநூறு ஆண்டுகளுக்கு முன்புவரை ஆறாயிரத்தை கடந்த எண்ணிக்கையில் இருந்தவர்கள், வெள்ளையர்கள் கொண்டு வந்து பரப்பிய நோய்களை சமாளிக்க முடியாமல் கிட்டத்தட்ட அழிவை நோக்கிச் சென்று பின்னர் மீண்டு வந்திருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் வெறும் பத்தொன்பது பேர் மட்டுமே எஞ்சியிருந்து தற்போது சுமார் ஐம்பது பேர் மட்டுமே எஞ்சியிருக்கிறார்கள். சில தலைமுறைக்கு முன்பிலிருந்தே இவர்கள் இந்தியர்களோடு இல் வாழ்க்கையில் இணைந்ததால் ஹிந்தி சரளமாக பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஆறு சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட சிறிய தீவொன்றில் இவர்களுக்காக குடிசைகள், பாடசாலை, மருத்துவமனை போன்ற வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது அந்தமான் நிர்வாகம். லிட்டில் அந்தமான் தீவில் வசித்து வரும் ஆங்கீ இன மக்களின் எண்ணிக்கை நூறுக்கும் குறைவாகவே உள்ளது. தங்களது பாரம்பரிய கதைகளின் வழியாக நில நடுக்கத்தைப் பற்றியும் ஆழிப் பேரலைகளைப் பற்றியும் புரிந்து வைத்திருக்கும் ஆங்கீஸ் மக்கள் 2004 இல் சுனாமி வந்த போது ஒரு உயிரிழப்பு கூட ஏற்படாமல் பிழைத்திருக்கிறார்கள். ஆனால் சில வருடங்களுக்கு முன்பு விசச் சாராயத்தை தவறுதலாக உட்கொண்டு எட்டுப்பேர் இறந்திருக்கிறார்கள். பெருகி வரும் மதுபான மோகம் ஆங்கீஸ் இன மக்களுக்கு ஆபத்தாக இருந்து வருகிறது. தவிர ஆங்கீஸ் இனப் பெண்கள் மிகவும் அரிதாக கருவுறுவதால் ஆங்கீஸ் மக்கள் அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள்.

க்ரேட் அந்தமானீஸை போலவே நிகோபர் தீவுகளில் வாழும் பழங்குடியினரை நிகொபரீஸ் என்று அழைக்கிறார்கள். நிகோபர் தீவுகளை இன்னமும் மிகவும் பாதுகாப்பாகவும், நாகரிக மக்கள் எளிதில் நுழைய முடியாதபடியும் வைத்திருப்பதாலோ என்னவோ நிகொபரீஸ் எண்ணிக்கையில் இருபதாயிரத்திற்கு மேல் உள்ளனர். ஒப்பீட்டளவில் மிகவும் நாகரிகமடைந்தவர்கள். இலவசக் கல்வித் திட்டத்தின் வாயிலாக இன்னும் சில ஆண்டுகளில் நிகோபர் மக்கள் அரசு பணியிடங்களை நிரப்பக் காத்திருக்கிறார்கள். நிகொபரீஸ் மக்களில் சுமார் அனைவரும் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். முற்றிலும் நாகரிக மனிதர்களுடனான தொடர்பற்ற மக்களும் அங்கு உள்ளனர். சுனாமி வந்த சமயம், இந்து நாளிதழ் முகப்பு பக்கத்தில் வெளியிட்ட புகைப்படத்தை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. ஒருமுறை அந்தமான் நிர்வாகம், நாகரிக மக்கள் குழுவை, இவர்களுடைய தீவிற்கு நட்புக்கரம் நீட்ட அனுப்பி




வைத்தது. குறிப்பிட்ட தொலைவு வரை படகில் சென்று அங்கிருந்து தேங்காய் களை வீசியிருக்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சியுடன் தேங்காய்களை பெற்றுக்கொண்டனர் பழங்குடியினர். அடுத்த கட்டமாக கரையில் இறங்க முயற்சி செய்ததும் மூர்க்கமாகத் தாக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு அவர்களுடைய பகுதியில் அத்துமீறிய மீனவர்கள் இருவரை அம்பெய்தி கொன்றிருக்கிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை கூட இதுவரையில் மர்மமாகவே இருந்து வருகிறது.

ஷாம்பென் மக்கள் ஒப்பீட்டளவில் மிகவும் சாதுவானவர்கள். இந்தோனேசிய, பர்மிய, வியட்நாமிய மக்களின் சாயலைக் கொண்டவர்கள் க்ரேட் நிகோபர் தீவில் ஆங்காங்கே சிறு சிறு பிரிவுகளாக வாழ்ந்து வருகிறார்கள். இரு நூறிலிருந்து முந்நூறு வரையில் எண்ணிக்கை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இடுப்புக்கு கீழே மட்டும் உடையணியும் வழக்கம் கொண்டவர்கள். வன விலங்குகளை வேட்டையாடியும் காய்கறி, பழங்களாலும் பசியாறுகிறார்கள். கடற்கரை ஓரம் குடியிருக்கும் பழக்கமில்லாததால் ஷாம்பென் மக்களை சுனாமி பெரிய அளவில் பாதிக்கவில்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classess




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

**★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees**

## International Award Winning Office

## Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
Tel:416-568-4301


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org